# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. VI** **Issue 4** **July 2016**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . . | 4 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 14 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 15 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 17 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 22 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 24 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 27 |
| ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1 . . . . . . | 29 |
| **The Life Divine – Outline** . . . . . . | 33 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 37 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 41 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 46 |
| **அன்னை இலக்கியம்** மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . | 48 |


**ஜீவியத்தின் ஓசை**

பெறுவதை
அறிபவன்
கொடுப்பதை
அறியான்.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்

தமிழாக்கம்: வித்யா ரங்கன்

## II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 300

Para 6

There is a first possible explanation.

It points to a self-organising dynamic Chance that is at work.

This paradox is necessitated by the appearance of inevitable order on one side.

On the other side there is unaccountable freak and fantasy in Nature.

The energy of Nature is an inconscient and inconsequent Force.

It acts at random and creates this or that by a general chance.

It creates without any determining principle.

Any determinations come in only as the result of a repetition.

It is a repetition of the same rhythm of action.

But this implies that in the origin of things there is a boundless Possibility.

Or there is a womb of innumerable possibilities.

They are manifested out of it by the original Energy.



## II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

இதற்கான ஒரு விளக்கம் உண்டு.

அது சுயமாக முறைமையை மேற்கொள்ளும் ஒரு தற்செயல் நிகழ்வுக்கான சக்தி செயல்படுவதைக் குறிக்கிறது.

ஒரு புறத்தில் தவிர்க்க முடியாத முறைமை இந்தப் புதிரை அவசியமாக்கியுள்ளது.

மறுபுறத்தில் காரணம் கற்பிக்க முடியாத, முறைகளைக் கடந்த கற்பனா இன்பம் பிரகிருதியில் உள்ளது.

இயற்கையின் சக்தி ஆழ்ந்து இருண்ட மற்றும் சீரற்ற ஒரு சக்தி.

அது தொடர்பற்று செயல்பட்டு ஏதோ ஒன்றைப் பொதுவான தற்செயலால் சிருஷ்டிக்கிறது.

அது எந்த நிர்ணய விதியையும் பின்பற்றாமல் உருவாக்குகிறது.

திரும்பத் திரும்ப நிகழும் விளைவால் மட்டுமே நிர்ணயம் அதில் எழுகிறது.

ஒரே சீர்ப்பிரமாணத்தில் மீண்டும் மீண்டும் எழும் செயல் அது.

ஆனால் இது விஷயங்களின் மூலாதாரத்தில் வரம்பற்ற சாத்தியங்கள் உள்ளதைக் குறிக்கிறது.

அல்லது எண்ணற்ற வாய்ப்புகளின் கருமூலம் அங்குள்ளது.

மூலமுதலான சக்தியால் அவை அதிலிருந்து வெளிவருகின்றன.

It is an incalculable Inconscient.

We are embarrassed to call it either an Existence or a Non-Existence.

The action of the Energy is unintelligible without some such basis.

Yet there is an opposite aspect of the cosmic phenomenon.

It appears to forbid the theory of a random action generating a persistent order.

There is too much of an iron insistence on Order.

There is too much insistence on a law basing the possibilities.

Rather there is an inherent imperative Truth of things.

It is unseen by us.

But it is a Truth capable of manifold manifestation.

It throws out a multitude of possibilities and variants of itself.

The creative Energy by its action turns them into so many realised actualities.

This brings us to a second explanation.

There is a mechanical necessity in things.

Many mechanical laws of Nature are recognizable by us.



அது வரையறுத்துணர முடியாத ஆழ்ந்த ஜடமான இருள்.

அதைச் சத் என்றோ அசத் என்றோ அழைப்பது நமக்கு தர்மசங்கடமாக உள்ளது.

அப்படிப்பட்ட ஒன்றை அடிப்படையாகக் கொள்ளாவிட்டால் சக்தியின் செயல்பாடு அறிவுக்குப் புரிவதாக இல்லை.

இருந்தாலும் அங்குப் பிரபஞ்ச நிகழ்வுக்கு எதிரான ஒரு பகுதி உள்ளது.

சீரற்ற செயல் சீரான முறைமையை எழுப்பச் செய்யும் தத்துவத்தை அது மறுப்பது போன்று தோன்றுகிறது.

அங்கு முறைமை மிக அதிகமான அளவு வலிமையோடு வலியுறுத்தப்படுகிறது.

அங்குச் சாத்தியங்களை அடிப்படையாகக் கொண்ட சட்டம் அளவுக்கு அதிகமாக வலியுறுத்தப்படுகிறது.

அங்கு விஷயங்களின் தவிர்க்க முடியாத சத்தியம் உள்ளார்ந்துள்ளது.

அதை நம்மால் பார்க்க முடிவதில்லை.

ஆனால் அச்சத்தியம் பல்வகைப் பெருக்கமுடைய வெளிப்பாட்டிற்கான திறன் கொண்டது.

தன் ஏராளமான சாத்தியங்கள் மற்றும் வேறுபாடுகளை அது வெளிப்படுத்துகிறது.

சிருஷ்டிக்கும் சக்தி அதன் செயல்பாட்டால் அவற்றை மெய்யான நிகழ்வுகளாக மாற்றுகிறது.

இது நம்மை இரண்டாவது விளக்கத்திற்கு அழைத்து வருகிறது.

அது விஷயங்களில் இயந்திரத் தன்மைக்கான அவசியம் உண்டு என்பதாகும்.

இயற்கையின் பல்வேறு இயந்திரத் தன்மைக்கான சட்டங்களை நாம் அறிந்துள்ளோம்.

The necessity might be some secret inherent Truth of things.
It might govern automatically the processes we observe in action in the universe.
But a theory of mechanical Necessity by itself does not elucidate the variations.

There is a free play of the endless variations which are visible in the evolution.
There must be behind the Necessity a law of unity.

It is associated with a coexistent but dependent law of multiplicity.
Both insist on manifestation.
But the unity of what, the multiplicity of what?
Mechanical Necessity can give no answer.

The stumbling-block is emergence of consciousness out of the Inconscient.
In an all-pervading truth of inconscient mechanical Necessity, it has no place.
If there is a necessity, which compels the emergence?

If so, it can be only this.
There is already a consciousness concealed in the Inconscient.
It is waiting for evolution.



அந்த அவசியம் விஷயங்களில் ஆழ்ந்து மறைந்துள்ள சத்தியமாக இருக்கலாம்.
அந்தச் சத்தியம் தன்னிச்சையாக பிரபஞ்சத்தில் நாம் காணும் செயல்களின் செய்முறைகளை ஆள்வதாக இருக்கலாம்.
ஆனால் இயந்திரத் தன்மையின் அவசியம் எனும் கோட்பாடு வேறுபாடுகள் தோன்றுவதன் காரணத்தை நமக்கு விளக்குவதில்லை.
அங்கு முடிவற்ற வேறுபாடுகளின் சுதந்திரமான லீலை உள்ளது. இவை பரிணாமத்தில் புலப்படக் கூடியவை.
அவசியத்திற்குப் பின் ஐக்கியத்தின் ஒரு சட்டம் இருக்க வேண்டும்.
அச்சட்டம் உடன்சார்ந்ததோடு ஒன்றியிருந்தாலும் பல்வகைப்பாட்டின் சட்டத்தை நம்பியுள்ளது.
இரண்டும் தங்கள் வெளிப்பாட்டை வலியுறுத்துகின்றன.
ஆனால் எதன் ஐக்கியம், எதன் பிரிவினை?
தவிர்க்க முடியாத இயந்திர இயக்கத் தன்மையால் இதற்கு எவ்வித பதிலும் தர முடியாது.
ஜட இருளிலிருந்து ஜீவியம் எழுவது முட்டுக்கட்டையாக உள்ளது.
ஜட இருளின் செயலான இயந்திர இயக்கத் தன்மையில் ஜீவியம் எழும் நிகழ்ச்சிக்கு இடம் இல்லை.
அதற்கான அவசியம் அங்கு எழுமானால், எது அதன் வெளிப்பாட்டை வற்புறுத்துகிறது.
அப்படி இருந்தால், அது இதுவாக இருக்க வேண்டும்.
ஜட இருளினுள் ஏற்கனவே ஒரு ஜீவியம் புதைந்து மறைந்துள்ளது.
அது பரிணாமம் பெறக் காத்திருக்கிறது.

When ready it will break out from its prison of apparent Nescience.
We may get rid of the difficulty of the imperative order of things.
We may suppose that it does not exist.
We may suppose that determinism in Nature is imposed on it.
It is imposed by our thought which needs such an imperative order.
That enables it to deal with its surroundings.

But in reality there is no such thing.
There is only a Force experimenting in a random action of infinitesimals.
They build up in their general results.
They build different determinations by a repetitive persistence.
They are operative in the sum of their action.

Thus we go back from Necessity to Chance as the basis of our existence.

But what then is this Mind, this Consciousness?
It differs so radically from the Energy that produced it.

For its action it has to impose its need of order.

It imposes it on the world she has made and in which it lives.



அது தயாராகும் பொழுது தன் தோற்றமான அறியாமைச் சிறையைத் தகர்த்து வெளி வரும்.
அப்படி வெளி வந்தால் நியதி எனும் சிரமத்திலிருந்து நாம் விடுபடலாம்.
நாம் அப்படி ஒன்று இல்லை என்றும் கருதலாம்.
இயற்கையின்மீது நியதிவாதம் சுமத்தப்பட்டுள்ளது என்று நாம் நினைக்கலாம்.
நம் எண்ணத்திற்கு நியதி என்பது தேவை என்பதால் எண்ணம் அதை இயற்கையின் மீது சுமத்தியுள்ளது.
அதன் மூலம் அது தன்னைச் சுற்றியுள்ள சூழலைக் கையாளுவது எளிதாகிறது.
ஆனால் உண்மையில் அப்படி ஒன்று இல்லை.
சிறியதன் ஒழுங்குமுறையற்ற செயலில் ஆராய்ச்சி செய்யும் ஒரு சக்தி மட்டுமே அங்கு உள்ளது.
அதனால் அவற்றில் பொதுவான விளைவுகள் ஏற்படுகின்றன.
அவற்றின் தொடர்ந்த நீடிப்பு, நிலை பெறுவதால் வேறுபட்ட நிர்ணயங்கள் உருவாகின்றன.
அவற்றின் செயல்கள் மொத்தமாக சேர்ந்த கூட்டுத் தொகையில் அந்த நிர்ணயங்கள் இயங்குகின்றன.
இவ்வாறாக நாம் அவசியம் என்பதிலிருந்து தற்செயல் நிகழ்வு என்பதை நம் வாழ்வின் அடிப்படையாகக் கருதும் நிலைக்கு மீண்டும் வந்து சேர்கிறோம்.
அப்படியானால், இந்த மனம், ஜீவியம் என்பதென்ன?
அது அதை உருவாக்கிய சக்தியிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது.
அது செயல்பட ஒழுங்கு முறையை வலியுறுத்துவது அவசியமாகிறது.
அது தான் உருவாக்கி வாழும் இவ்வுலகத்தின்மீது அதைச் சுமத்துகிறது.

There would then be the double contradiction.
Consciousness emerges from a fundamental Inconscience.
Yet there is a Mind of order and reason.

It manifests as the brilliant final consequence of a world.

That world is created by inconscient Chance.

These things may be possible.
Before we can accept, they need a better explanation.

Contd...

### ஜீவிய மணி

*அந்த நாளில் 7 அல்லது 10 குழந்தைகளைத் தாய் எப்படி வளர்த்தாள்? தாயார் வளர்க்கவில்லை. அவை தானே வளர்ந்தன. அவை சமூக மூடநம்பிக்கை, அதன் கடுமை இரண்டிற்கும் உட்பட்ட சுதந்திரத்தில் அவர்கள் வளர்ந்தன. இன்றும் மூட நம்பிக்கை ஏராளமாக உண்டு. ஆனால் குறைவு. கடுமை அளவு கடந்து குறைந்து விட்டது. இவையெல்லாம் குழந்தை உயர்ந்த பண்பைப் பெறப் போதாது. பெற்றோருக்குரிய பண்பு இயல்பாக குழந்தைக்கு வரும். அது உயர்ந்ததாக இல்லாவிட்டாலும், அந்த வரையறைக்குள்ளேதான் குழந்தை உயர்ந்த பண்பைப் பெற முடியும். பிரபலமான பள்ளிகளில் பரந்த மனப்பான்மையுடைய தாய்மார்கள் தங்கள் குழந்தைகளையொட்டி* **Kinder Garten** *வகுப்புகளை நடத்த முன்வந்தால் இது முடியும். தாய்மார்கள் ஆசிரியர்களாக முன்வந்து அன்பால் வாழ்வை உருவாக்கும் ஸ்தாபனம் இது. கல்வி மூலமே பண்பு வரும். அன்பே அதைப் புகட்டும். 100 ஆண்டுகளுக்குமுன்* **K.G.** *வகுப்புகளை பெண்கள் நடத்த முன்வந்ததுபோல், சமூகத்தில் உச்சகட்ட தாய்மைப் பண்பை பெற்றவர் எல்லா குழந்தைகளையும் வசீகரிக்கும் ஆசிரியராகப் பணிபுரிய பலர் முன்வந்தால், இது நடக்கும்.*

**It is a creation of an educational centre of emotional culture.**



அப்படியானால் அங்கு இரட்டை முரண்பாடு எழுகிறது.
அஸ்திவாரமான ஜட இருளிலிருந்து ஜீவியம் வெளிவருகிறது.
இருப்பினும் அங்கு ஒழுங்கு முறையும் பகுத்தறிவும் கொண்ட மனம் உள்ளது.
அது அற்புதமான முடிவான விளைவாக, உலகமாக வெளிப்படுகிறது.
அவ்வுலகம் ஜட இருளின் தற்செயல் நிகழ்வாக உருவாக்கப்படுகிறது.
இவை சாத்தியமாக இருக்கலாம்.
இவற்றை நாம் ஏற்பதற்குமுன் இவற்றிற்கு ஒரு மேலான விளக்கம் தேவை.

தொடரும்...

### ஜீவிய மணி

*கடந்த கால வரலாற்றின் வாழ்வு, அனுபவம், பண்பு, கலாச்சாரம் அனைத்தையும் பெற்றோர் அடுத்த தலைமுறைக்கு அளிக்கும் வாயிலாக குடும்பம் என்ற ஸ்தாபனம் ஏற்பட்டது. தகப்பனாரில்லாமல் வளரும் குழந்தை, தாயில்லாமல் வளரும் குழந்தை, அநாதை விடுதிகளில் வளரும் குழந்தைகள் இன்று பெரும்பாலும் குற்றவாளிகளாகவும், போக்கிரி-களாகவும் உருவாகின்றனர். திருவுருமாற்றம் செயல்பட்டால், பெற்றோரின் குறைகளின்றி குழந்தைகள் நேரடியாகப் பரந்த சமூகப் பண்புகளுடன் வளரும். இது கற்பனை அல்லது தத்துவம். ஆனால், எதிர்காலம் இதற்குரிய அமைப்பை உருவாக்கும் எல்லா அறிவும், அனுபவமும் இன்று சமூகத்திற்கு உண்டு. இயல்பாகப் படிப்படியாக இந்த மாற்றம் எழுந்தால் அதன் கட்டங்களை அறியலாம். திடீரென மாற்றம் வந்தால் அது புயலாக வெடிக்கும். உலகெங்கும்* **Pre.KG, LKG, UKG** *வகுப்புகள் வந்துள்ளது முதல் அறிகுறி. அங்கும் குழந்தைகள் தாய், தகப்பனாரைப் பிரிய பிரியப்படவில்லை. தகப்பனார்மீது அதீத பற்றுள்ள குழந்தை தாய், பாட்டியுடன் வளர்ந்தாலும், அவன் ஆசை முழுவதும் தீவிர வேகமாகி ஆர்ப்பாட்டமாகிறது. வெகு சிறப்பான எதிர்காலம் உள்ளதை வேகம் காட்டுகிறது. தகப்பனார், தாயார், குடும்பம் ஆகியோர் உளநிலையின் உண்மையை அறிந்து குழந்தையின் வேகத்தைப் பெரும் திறமையாகச் செய்யும் ஞானம் இன்று உலகில் உள்ளது.*

இம்மாதச் செய்தி

# சிந்தனையால் அகந்தை வலுப்படும். அழியாது.



**சாவித்ரி**

**Page 186: A charm and greatness locked in every hour**
***கவர்ச்சியும், பெருமையும் க்ஷணத்துள் பூட்டி வைத்து***

- ✡ அனைத்துப் பொருட்களிலுமுள்ள ஆனந்தத்தைக் கிளப்பி
- ✡ பெரு வெற்றி அல்லது பெரும் தோல்வி
- ✡ மோட்சத்தில் சிங்காசனம், அல்லது நரகத்தில் படுகுழி
- ✡ இருவகையான சக்தியை அவை ஏற்றன
- ✡ அவர் ஆத்மாவைப் பிரம்மாண்ட முத்திரையால் மூடி
- ✡ விதி செய்ய வேண்டியவன அனைத்தும் ஏற்கனவே விதிக்கப்பட்டு
- ✡ அவை செய்த சில, அவையிருந்த சிலவகை, அவர் வாழ்வு
- ✡ ஜடம் ஆத்மாவின் செயல், அது ஆத்மாவுக்குக் காரணமில்லை
- ✡ புவியின் சத்தியத்திற்கு எதிரான நிதானம்
- ✡ சூட்சுமம் கனக்கிறது, ஜடம் லேசானது
- ✡ புறத்திட்டம் அகப் பண்பால் நிர்ணயிக்கப்படுகிறது
- ✡ தெளிவான சொல் தெறிப்பான எண்ணத்தில் அதிர்ந்து
- ✡ ஆத்ம தீவிரத்தில் செயல் ஈடுபட்டு ஏங்கி
- ✡ உலகத்தின் புலப்படும் திட்டம் தோற்றமாக எழுந்து
- ✡ திரும்பி உள்ளே மறையும் வலிமையை பார்வையின் அதிர்வால் கண்டு
- ✡ புறப்புலனால் கட்டுப்படாத மனம்
- ✡ ஆத்மாவுக்குப் புலப்படாத ஆழத்திற்குரிய உருவங்களைக் கொடுத்தது

✡ வழியை வகுத்தறியாத உலகம் தரும்பலன்

✡ உடலின் திட்டவட்டமான புல்லரிப்பாய் மாறியது

✡ உருவமற்ற சக்தியின் தெளிவான செயல்

✡ அடிமனச் செயல்கள் அறியாமல் செயற்படும்

✡ சுவருக்குப்பின்னால் ஒளிந்து காத்திருக்கும்

✡ முகத்திரையை அகற்றி முனைந்து முன்வந்து

✡ சூட்சுமம் அங்கு வெளிவந்தது, அனைவரும் அறிந்தது இருந்தது

✡ மறைந்ததின் செயல், எழுந்து தெரியாததின் பொறுப்பை ஏற்று

✡ தெரியாததைத் தொட்டு, காணும் உருவங்களைக் களைந்து

✡ இருமனம் இணைந்து செயல்படும் இசைவு

✡ எண்ணம் எண்ணத்தை ஏற்றது, சொல்லெழும் அவசியமில்லை

✡ உணர்ச்சி இரு இதயத்துள் உணர்ச்சியுடன் கலந்தது

✡ தசையிலும், நரம்பிலும் அடுத்தவர் புல்லரிப்பதை அவருணர்ந்தார்

✡ அடுத்தவருள் உருகி ஆயிர மடங்கு பெருகி

✡ இரு வீடு எரிந்து கலந்து பெருகுவது போல்

✡ வெறுப்பு வெறுப்புடன் கலந்து, அன்பு அன்புள் வெடித்தெழுந்து

✡ காணாத மனத்திடலில் செயலின் உறுதி அடுத்த உறுதியின்மீது மோதி

✡ பிறர் உணர்வு அலையாகப் படர்ந்து பரவும்



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/31. சமர்ப்பணம் அழைப்பில் முடியும்

- அழைப்பையும், சமர்ப்பணத்தையும் ஒன்றாகக் கருதுவது தவறல்ல. *அவற்றின் வித்தியாசத்தை உணர்வது, அரசியலில் பிரதம மந்திரிக்கும், ஜனாதிபதிக்கும் உள்ள வேறுபாட்டை அறிவது போலாகும்.*
- சாப்பாடு சாப்பிடுகிறோம். காபி சாப்பிடுகிறோம், பழம் சாப்பிடுகிறோம் என்றால் தெலுங்கு பேசுபவர்கட்கு வேடிக்கையாக இருக்கும். உண்பன, திண்பன, பருகுவன என்ற வேறுபாடுண்டு.
- பெரிய விஷயங்களில் தத்துவம், நடைமுறை என்ற வேறுபாடுண்டு.
- பாமர மக்களுக்கு, காந்திஜி, நேரு இருவரும் தலைவர்கள். ஒரு கட்சி ஆட்சி செலுத்தினால் அரசியல் கட்சியும், பார்லிமெண்ட்டில் அதே கட்சியும் வேறுபடும். பிரதமரைத் தேர்ந்தெடுக்க அரசியல் கட்சிக்கு அதிகாரமில்லை. **M.P.**-யான அக்கட்சி அங்கத்தினர்கட்கு மட்டும் அவ்வுரிமையுண்டு. *விஷயம் முக்கியமானால், சிறிய வேறுபாட்டுக்கும் பெரும் மாறுதல் எழும்.*
- சாப்பாடு எனில் **Carbohydrate, Protein** மாவுச் சத்து, புரதச் சத்து எல்லாம் நல்லது. இரண்டும் ஒன்றே. டயாபெடிக்ஸ் வந்தால் ஒன்று உதவும். அடுத்தது தொந்தரவு செய்யும். **Carbohydrates** அரிசியிலும், கோதுமையிலும் உண்டு. வியாதியஸ்தனுக்கு அந்த வித்தியாசம் முக்கியம்.
- பொதுவான பக்தனுக்குச் சமர்ப்பணம், அழைப்பு இரண்டும் ஒன்றே.
- பக்தி தீவிரமாகி, யோகத்தில் உயர்ந்த கட்டங்களை எட்டினால் இரண்டும் வேறாகும்.

- அன்பர், பக்தர், சாதகர் என்ற பாகுபாடுள்ள இடத்தில் பக்தர் எளியவர். எல்லாக் கடவுள்களையும் வணங்குவது போல் அன்னையை வணங்கி வாழ்க்கை விளக்கம் பெறுபவர். அன்பர் அன்னையை அவர் கோட்பாடுகள் மூலம் ஏற்று வாழ்வு மூலம் அன்னையை அதிகமாக அறிய முயல்பவர். *சாதகருக்கு யோகம் முக்கியம். வாழ்வு யோகத்தின் பகுதி.*
- பக்தர் சமர்ப்பணத்தால் வாழ்க்கை பிரச்சனைகளைத் தீர்க்க முயல்பவர். அழைப்பு அவர் தியானத்திற்குரியது.
- அன்பர் சமர்ப்பணத்தால் வாழ்வில் இதுவரை தீராத பிரச்சனைகளைச் (கர்ம பலனால் வந்தது என்ற பிரச்சனைகளை) சமர்ப்பணத்தால் தீர்க்க முயல்பவர்.
- சாதகர் ஜீவனைச் சமர்ப்பணம் செய்து, அன்னையுடன் இரண்டறக் கலப்பதால், அதன் பலனாக வாழ்வு கர்மத்தின் பிடியினின்றும், வறுமையின் கொடுமையினின்றும் விலக வழி செய்பவர்.
- மனிதன் வாழ்வதைத் தத்துவம் ஜட லோகம் என்று கூறும். பகவான் அதை மேல்மனம் எனக் கூறுகிறார்.
- *இதுவரை செய்த யோகங்களெல்லாம் மேல்மனத்தைச் சேர்ந்தவையே. அங்கு அகந்தை ஆட்சி செய்கிறது.*
- மேல்மனத்தின் அடியில் சூட்சுமமான உள்மனம் உண்டு.
- அதையும் கடந்து சென்றால் அடிமனம் உண்டு. சைத்திய புருஷன் அங்குண்டு.
- அடிமனம் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளது. பாதாளமும், பரமாத்மாவும் இணையும் இடம் அது.
- வாழ்வில் உத்தியோகஸ்தன், தொழில் செய்பவன் (**employee, employer**) என்றுண்டு. வேலை செய்பவனுடைய சாதனை, சம்பளம், வருமானம் அனைத்தும் அவன் வேலைக்குட்பட்டது. அது சம்பளம் மூலமாக மட்டும் வரும். முதலாளிக்கு இலாபம் உண்டு. அது கம்பெனியிலிருந்தும், மார்க்கெட்டிலிருந்தும் வரும். மரபு உத்தியோகம் போன்றது. ஸ்ரீ அரவிந்தம் சொந்தத் தொழில் செய்யும் முதலாளியைப் போன்றது.



- மரபுக்கு மோட்சம் இலட்சியம். மோட்சம் என்பது தவசியின் ஆத்மா அவன் ஜீவனை விட்டுப் பிரிந்து பிரம்மத்தை அடைவது. அது மலைபோன்ற சாதனை.
- பூரண யோகம் மேல்மனத்தினின்று, உள்மனம் வழி அடிமன சைத்திய புருஷனையடைந்து அங்கிருந்து உயர்ந்து பிரபஞ்சம் முழுவதும் பரவி, *பிரபஞ்ச வாழ்வைத் திருவுருமாற்றுவது*. இது இறைவனின் யோகம். சாதகன் பங்கு சரணாகதி மட்டுமே.
- சமர்ப்பணம் வாழ்க்கையில் கடினம். வாழ்வைக் கடந்தால் சமர்ப்பணம் மறைந்து கரைந்து போகும். மேல்மனம் கருங்கல் போன்றது. சமர்ப்பணம் முழுமையாகி, தடை உடைந்து உள்மனம் போவது யோகத்தில் முதற்கட்டம். *அது யோகப் பிரச்சனை. அந்நிலையில் சமர்ப்பணம் திறனிழந்து நிற்கும். திறனிழந்த சமர்ப்பணத்திற்கு உயிர் கொடுத்து தெம்பு கொடுத்து மீண்டும் வாழ வைப்பது அழைப்பு*. அரசியல் தொண்டர்கட்கு பதவி வருவதில்லை. வந்தால் கட்சியில் தொண்டர் படையில் பதவி வரும். தொண்டன் கட்சியினின்று பதவிக்கு வருவது போன்றது அன்பன் சாதகனாவது, சமர்ப்பணம் அழைப்பாவது. *அழைப்பை ஆரம்பிக்க முடியாது. ஆரம்பித்தால் நிறுத்தக் கூடாது, நிறுத்த முடியாது.*
- பிரார்த்தனை, சமர்ப்பணம், அழைப்பு, சரணாகதி, ஆர்வம், பக்தி என்பவை எல்லாம் ஒன்றே.
- குப்பம், குறிச்சி, ஊர், புறம், பட்டி, தொட்டி, மங்கலம், வரம், ஆகியவை கிராமங்களைக் குறிக்கும் சொல்.
- *சமர்ப்பணம் எளிதில் பலிக்கும். அதனால் நாம் அதை ஆராய்வதில்லை.*
- நம் சுபாவம் இடம் கொடுக்காத இடத்தில் சமர்ப்பணம் பலிக்காது.
- எலக்ஷனில் ஜெயிக்க சமர்ப்பணம் பேரளவு உதவும்.

‘நான்’ எலக்ஷனில் ஜெயிக்க வேண்டும் எனில் ‘நான்’ தோற்று விடும்.

‘நான்’ விலகாதவரை பலிக்காது, சமர்ப்பணம் நகராது.

- *‘நான் செய்யும் சமர்ப்பணம் பலிக்கும்’ எனில் முடிவில் பெரு வெற்றி எழும்.*

  முடிவில் நான் சமர்ப்பணத்துள் இருக்கும்வரை எதுவும் பலிக்காது. எதிரான பலன் வரும்.

- ‘நான்’ என்பதற்குப் பல நிலைகள் உண்டு.

  முதல் நிலை என் வெற்றி.

  அதற்கும் முன்நிலை வெற்றி.

  *அடுத்தாற்போல் வெற்றியை ‘நான்’ தேடுவது.*

  என் சமர்ப்பணம் அடுத்தது.

  நான் சமர்ப்பணம் செய்து வெல்வேன் எனச் சவால் விடுவது.

  இதுபோல் பல கட்டங்கள் தாண்டிய நிலையில் எமன் ‘நானே இறைவன்’ என்று கூறி ஒளியில் கரைந்தான்.

- நிலை மாறினால் பலனில் நிலை மாறும்.
- மனையை நல்ல விலைக்கு விற்பதைவிட நான் விற்றுக் காட்டுகிறேன் என்பது ஒரு மனநிலை.
- என் மருமகளை ‘நான்’ மகளாக நடத்துவேன் என்பதும் பாஸிட்டிவான ‘நான்’ முதலில் பெரு வெற்றியும் பிறகு முழுத்தோல்வியும் எழும்.
- ‘நான்’ என்பதற்கு வாழ்விலுள்ள 10 அல்லது 100 கட்டம் தெரிந்ததே.
- ‘நான்’ என்பதற்கு **ego, self, Self, Purusha, Ishwara, Supreme, Psychic** என்ற கோணத்தில் பல நூறு நிலைகள் உண்டு.

  விஷயத்தைப் பொறுத்து ‘நான்’ பலன் பெறும்.

- எல்லா நிலைகளிலும் முதலில் பெரு வெற்றியும் முடிவில் முழுத் தோல்வியும் உண்டு.



- பெண் வாழ்வில் பொதுவாகத் தாயாரும், ஏதோ ஒரு சமயம் தகப்பனாரும் தங்களை நிலைநிறுத்த முயன்று மகன், மகள் வாழ்வை நாசமாக்குவது இயல்பு.
- *மகள், மகன் சந்தோஷமாக இருப்பதைக் காணப் பொறுக்காத பெற்றோர் உண்டு.*
- மருமகன் மாமியாரை அதிகாரம் செய்வதில்லை. அரிபொருளாகச் செய்வதும் உண்டு.

  மருமகன் தன் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற மாமியார் அரிது என்றாலும் உண்டு.

  *“என் மகள் சந்தோஷத்திற்காகத் தானே செய்கிறேன்” என்ற மாமியாருக்குத் தான் தன் மகள் வாழ்வில் தலையிடுவதே தவறு எனத் தோன்றுவதில்லை.*

  தாயாருக்கு அந்த இடம் தரும் மகள் அறிவிலி.

- சமர்ப்பணம் நகராத இடங்கள் பல. மேற்சொன்னவை சில.
- ஒவ்வொரு கட்டத்திலும் செய்யக்கூடியவை ‘சமாதிக்குப் போ’ என்பது போல் ஒன்றுண்டு.

  கேட்பது, கேட்டறிந்ததை ஏற்பது, ஏற்றுச் செய்வது, பெறுவது, பெற மறுப்பது, கிராக்கி என ஒவ்வொன்றிற்கும் ஒரு பதிலுண்டு. *இது அனைவரும் அறிந்ததே.* செய்ய மறுப்பவர் சந்திக்கும் இடையூறுகளே சமர்ப்பணம் செயல்படத் தடை.

- சமர்ப்பணம் தடையானால் அழைப்பு உதவும் என்பது ஒரு கட்டம்.
- அன்பர் இதுபோல் தன் அனுபவத்தைச் சிந்தனை செய்து, பலித்த காரணம், தவறிய காரணமறிந்தால் சமர்ப்பணம் அதிகமாகப் புரியும்.
- சமர்ப்பணம் பலிக்காத நேரமில்லை.

  *சமர்ப்பணத்தையே தடையாக மாற்றாதவர் குறைவு.*

  அழைப்பால் சமர்ப்பணத்தையும் சமர்ப்பணத்தால் அழைப்பையும் நகர்த்தலாம்.

- அன்னை இவற்றைக் கடந்தவர்.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 126. உயிர் மனத்தை ஏற்பது

- நாம் செயல்படுகிறோம் என நாம் நினைப்பது இயற்கை செயல்படுவதாகும்.
- செயல் என்பது நம்மைப் பொறுத்தவரை எண்ணத்தை உடல் ஏற்பது.
- ‘எண்ணம்’ என்பது ஆத்மாவின் செயலையும், இயற்கையின் செயலையும் மனம் ஏற்பது.
- கீழிருந்து செயல்படுவது இயற்கை. அது உடல், உயிர், மனம் வழி செயல்படுகிறது.
- மேலிருந்து செயல்படுவது ஆத்மா. மனம் வழி உயிரைக் கடந்து உடலையடைவது.
- கல்லெறியும் கூட்டத்தில் அறிவுள்ளவனுக்குக் கல் எரியத் தோன்றுவது அவன் செயலல்ல, கூட்டம் அவனை உந்துகிறது.
- கல்லூரியில் மாணவன் இலட்சியம் பேசுவது அவன் கூறுவதல்ல, கல்லூரிச் சூழல்.
- *மனிதன் - ‘நான்’ - செய்வது என்ன?* அது குடும்பம், ஊர் சொல்வது.
- ஒரு நடிகன் பிரபலமானபின் அவன் hero-வாக நடித்துப் பிரபலமானால் மட்டும் அவனுக்குச் சிறுவயதிலேயே நடிக்கப் பிடிக்கும். பரோபகாரம் சொந்தமாகவேப் பிடிக்கும் எனப் பேசுவதைப் பார்க்கலாம்.
- நடிப்பு அவன் பர்சனாலிட்டி, Hero அவன் individuality தனித்தன்மை.
- உலகில் செயல்படுவது இயற்கை. அதை இயக்குவது இறைவன். அவை இணைந்து மனிதன் மூலமாக செயல்படும் பொழுது மனம், உயிரைக் கடந்து செயல் உடலால் எழுகிறது.



- இந்தியன் சுதந்திரப் போராட்டத்தில் அப்படி வீறு கொண்டு எழுந்தவன்.
- ஆங்கிலேயர் ஹிட்லரை எதிர்க்க எழுந்ததும் அதுபோலவே.
- ரூஸ்வெல்ட் சொன்னதால் அமெரிக்கர் திவாலான பாங்கில் திருப்பி தம் பணத்தைப் போட்டாலும், அது *தனக்கே புரிந்து செயல்பட்டதாகும்.*
- நாமெல்லாம் சுடக் கற்கிறோம். க்ஷத்திரியனுக்கு அது இயல்பாக வரும். அது ஜாதித் திறமை. Individuality மூலம் அது வெளிவந்தால், அவன் தளபதியாவான்.
- ஒருவருக்கு அப்படி வார்த்தை பலித்தால், அவரால் பிறருக்கு பிரச்சனை தீர்ந்தால், வியாதி குணமானால், ஞானோதயம் எழுந்தால் அவருக்கு யோகம் பலிக்கும்.
- பல ஆண்டான பிரச்சனை இன்று புரிந்து தீர்ந்தால், மனம் புரிந்துகொள்வதை உயிரும் உடலும் ஏற்கின்றன எனப் பொருள்.
- உயிர் மட்டும் புரிந்து கொண்டால், அவன் பிரச்சனை தீரும்.
- *அனைவர் பிரச்சனையும் தீர்ந்தால், உடலும் ஏற்பதாகும்.*
- ஹசாரே கூறியதை ஊர் ஏற்றது. பல ஊர்கள் ஏற்றன. இன்று நாட்டிற்கே லஞ்சம் ஒழிய வேண்டும் என்கிறார். ஊர் ஏற்பது உயிர் ஏற்பது. நாமேற்பது உடலும் ஏற்பது. உடலின் ஆன்மா ஏற்றால் உலகமே ஹசாரேயை ஏற்கும்.
- இவை யோக சித்திகள்.
- பூரண யோகம் பலிக்க, உடலின் ஆத்மா ஏற்றுச் செயல்பட வேண்டும்.
- யோகம் பூரணம், பூரண யோகம் உலகத்திற்கும், பிரபஞ்சத்திற்கும் அதைக் கடந்த பிரம்ம நிலைக்கும் பெறும் பூரணமாகும்.

## அஜெண்டா

**உயர்வதும் அகலுவதும் மனிதன் மூலத்துடன் சேரலாம் அல்லது தன்னை விரிவுபடுத்தலாம்.**
**இது மற்ற லோகங்கட்குரியதல்ல. பூமிக்கு மட்டும் உண்டு.**

- மானிடரைத் தேவரின் மேலவராக்குவது பூமா தேவி.
- தெய்வம் இறைவனை நேரடியாக எட்ட முடியாது. எட்ட விரும்பினால் உலகில் மானுடனாகப் பிறக்க வேண்டும்.
- அகலம், ஆழம் என்ற இரு பரிமாணங்கள் உண்டு. அகலம் உள்ளதை விரிவுபடுத்தும். ஆழம் மூலத்தையடைய உதவும்.
- குடும்பத்தில் திறமையான இளைஞன் திறமையால் சாதிப்பவை எல்லாம் அவனைப் பிரபலமாக்கும்.
- ஆழ்ந்து யோசனை செய்பவனுக்குத் திறமை இரண்டாம்பட்சம். அவனுக்கு முதற்காரணமாக தாயும் மகளும் நெருக்கமானவர். தகப்பனார் எப்படி ஆரம்பித்தாலும் முடிவில் தாயாரையே அனுசரிப்பார். தாயின் பிறப்பு எவ்வளவு பலம் வாய்ந்ததானாலும், பொது விஷயங்களில் தகப்பனார் தாயாரை அனுசரிக்க முடியாது. *பொது விஷயங்களைக் கடந்து பல கட்டங்களைத் தாண்டினால் பிரம்மம் இறைவனாக வெளிப்படும்*. தகப்பனார் அங்கெல்லாம் தாயாரைக் கருத முடியாது. எனினும் தாய் அங்கும் இயற்கையாக எழுவாள். தகப்பனார் அதுபோன்ற ஒரு விஷயத்தில் இறைவனை-யொட்டிச் செயல்பட விரும்பினால், அவர் மனம் அந்த நேரம் உள்ள விஷயத்தில் இறைவன் அம்சத்தை நாடும். உதாரணமாக நாட்டுக்குப் பொது மொழி தேவை என்பதில் தாயின் அபிப்பிராயம் செல்லாது. தகப்பனார் ஆங்கிலத்தை நினைத்தால், அவருள் உள்ள தாய் ஹிந்தியைக் கருதும். இதைக் காணும் இளைஞன் மூலத்திலும் மனிதன் தேடுவது சக்தியெனக் கண்டு சக்தி மூலம் மூலமான பிரம்மத்தை அடைவான்.



- குடும்பம் சிறியதானாலும் சாரமான விஷயங்களில் அடிப்படையில் உயர்ந்தது. திறமை வளர்ந்தால்தான் பிரபலமாவான். பொறுப்பு வளர்ந்தால் மூலத்தை எட்ட முடியும். ஒரு ஆபீசில் கொடுத்த வேலையை மட்டும் செய்ய வேண்டும், பொறுப்பு எடுத்தால் பிற வேலைகளைக் கருத வேண்டும். ஆபீஸ் அதற்கு இடம் கொடுக்காது. ஆபீஸில் பொறுப்பு மனதளவில் இருக்கும். அதற்கு பிரமோஷன் வரும். *பொறுப்பு பெரியதானால், ஒருவனுடைய பொறுப்புணர்ச்சிக்கு பிரமோஷன் உயர்ந்த சம்பள ஸ்கேலாக வரும்.*
- மனிதனுக்கு கடைசி வரையிலும், அதைக் கடந்தும், பெண் தேவை. முடிவாகத் தன்னுள் உள்ள பெண் அம்சம் தேவை. இதை வேதம் தெரிந்து அங்கு முடிவான கட்டத்தில் ஆபத்தை எச்சரித்தது. *ஸ்ரீ அரவிந்தம் வேதம் சத்திய ஜீவியத்தைக் கண்டதை அறிந்தது. உபநிஷதம் அதை அறியுமென்றாலும், அதை முக்கியமாகக் கருதவில்லை*. இன்று 30,000 வருஷங்கட்குமுன் சத்திய ஜீவியம் வரும் என்பது போல் அன்று 35,000 ஆண்டுகட்குமுன் வரும் என்பதும் உண்மை. குடும்பம் செழிக்க நல்ல மனைவி தேவை. ஆவது பெண்ணால் - அது ஆண் ஆண்ட காலம். பெண் ஆளும் காலம் வந்தால் அவள் எழுதுவது வேறு. துறவறம் முக்கிய-மானால் பெண் விலக்கப்பட வேண்டும். வேதம் கூறியது முழு வாழ்வு. அங்கு முடிவான கட்டத்தில் பெண்ணில் சிலர் ஆணுக்குத் தீங்கு செய்வார்கள். அது ஆண் தன்னை மட்டும் கருதும் உயர்ந்த - பரநிலை - நிலை. தன்னை மட்டும் கருதும் ஆணுக்குப் பெண் ஊறு செய்ய முடியும். அப்பரநிலை-யில் ஆண் முழுநிலையைக் - **personality and impersonality** - கருதினால் பிரபஞ்சத்தில் அன்னை, **Mother's personality** எழுவார். அன்னையில் உள்ள பெண்மை ஆணுக்கு தீங்கு செய்யாது. ஆணின் பகுதியான பிரம்மத்தை முழுமையான பிரம்மமாக்கும். அப்பிரம்ம நிலை *பிரபஞ்சத்திற்கும் அதைக் கடந்த பிரம்ம வாழ்விற்கும் உரியது*. அங்கு **bliss delight** ஆகிறது. அசையாத தனிமனித ஆனந்தம் அசையும் பிரபஞ்ச

ஆனந்தமாகி அதை ஒவ்வொருவருக்கும் தருகிறது. அது திருவுருமாற்றத்தாலும் பரிணாமத்தாலும் வருவது. *புவியில் நடக்கும் சிறு செயலும் பிரம்மத்தில் முடிவு செய்யப்பட்டது என்பது* **Photo resolution** *முழுவதும் மனிதனை அப்பட்டமாகக் காண்பிப்பது போலாகும்.* காமிராவைப் பொறுத்து படம் விவரமான விளக்கமுடையதை **resolution** எடுத்துக் காட்டும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னை மனம் என அறியும் மனிதன் தான் 'சத்திய ஜீவியம்' என உணர வேண்டும். இளைஞனை குடும்பம் வளர்த்தது. வயதானபின் தான் இனியும் சிறுவனில்லை, முழு மனிதன் 'இதுவரை என்னைக் காப்பாற்றிய குடும்பத்தை இனி நான் காப்பாற்ற வேண்டும்' என அவன் உணர வேண்டும், சத்திய ஜீவியம் என்பதை வேதம் அறியும். அன்றிலிருந்து எவரும் அதையடைய நினைக்கவில்லை. மனிதன் பிரபஞ்சம் முழுவதும் பரவி, எதையும் செய்யும் வல்லமை பெற்று, பேரானந்தமடைந்து, தன்னை அறிவதே முழுமை. இதைச் சாதிப்பது திருவுருமாற்றம். சரணாகதியால் மட்டும் பெறக் கூடியது திருவுருமாற்றம். கெட்டதை விலக்குவது இயல்பு. கெட்டதை நல்லதாக மாற்றும் வழி உலகிலில்லை. இருளை ஒளியாக்குவது எப்படி? திருடனைத் தலைவனாக்குவது முடியுமா? கடன் சொத்தாக மாறுமா? மனம் சரணடைந்தால் கடன் சொத்தாகும். நம் மனத்தில் உள்ள கெட்ட எண்ணத்தை (உ.ம். பொறாமையை தாராளமானதாக மாற்ற) நல்ல எண்ணமாக மாற்றினால் திருவுருமாற்றம் புரியும். உடல் நிர்ப்பந்தம் செய்யும். தூங்க விரும்பினால் அதைத் தடுக்க முடியாது. உயிர், உயிரை எடுக்கும். நினைத்ததைச் செய்யாமலிருக்க நிமிஷம் அனுமதிக்காது. இப்படி எழுந்த வாழ்வு எளிமையாகவோ, ஆடம்பரமாகவோ இருக்கலாம். இதுவரை இருளிலிருந்து அருளுக்குப் பரிணாம வளர்ச்சி பெற்றது மாறி, இனி சிறிய அருள் பெரிய அருளாகும் நேரம் வந்ததை அறிய வேண்டும்.

உடல் செய்யும் ஆசனமும், உயிர் செய்யும் பிராணாயாமமும், மனம் செய்யும் தியானமும் விலகி உயர்ந்து, ஆத்மாவின் சரணாகதியாகி திருவுருமாற்றம் சித்திக்கும்.



# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

20. நாம் செலவு செய்யும் எனர்ஜியைவிட நம் உடம்புக்குள் வரும் எனர்ஜி அதிகமாக இருக்கும்படி வைத்துக் கொள்ள வேண்டும். திட்டமிட்ட உணவு, முறையாக உடற்பயிற்சி, சுத்தமான பழக்க வழக்கங்கள் மற்றும் சந்தோஷமான மனநிலை ஆகியவை நம்முடைய எனர்ஜியை எப்பொழுதும் பாஸிட்டிவாக வைத்துக் கொள்ள உதவும். இப்படி எனர்ஜியை பாஸிட்டிவாக வைத்துக் கொள்வது நம்முடைய உடல் நிலை எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்க உதவும்.

நமக்கு உடல், உயிர், அறிவு, ஆத்மா தேவை என்பது உண்மையானாலும் மேலும் சில பொதுவான அடிப்படையான உண்மைகள் உண்டு. அவை

- 4 அம்சங்கள் தேவைப்பட்டாலும் ஒரு அம்சம் சிறப்பாக இருப்பதே பொது வெற்றிக்கு உதவும்.
- எந்த அம்சம் சிறப்பானாலும் எல்லா அம்சமும் சிறப்பாக இருக்க உதவும்.
- இந்த 4 அம்சங்கள் நூலிலும் உள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

  மனத்திற்கு உயிர் எனும் உணர்ச்சியுண்டு, மனத்தின் உடல் நிலையைச் சரியாக வைத்துக் கொள்ளும் அடிப்படை மூளை. மூளையை மனத்தின் உடல் எனலாம்.

  உயிருக்கு உடல் உண்டு. அது நரம்பு மண்டலம். உயிருக்கு அறிவுண்டு. அதுவே வாழ்வில் பிழைக்க உதவும் அறிவு.

  உடலுக்கு உணர்ச்சியுண்டு. அது தொடு உணர்ச்சி. சொரணை என்பதும் அதுவே. உடலுக்கு மூளையுண்டு. டைப்பிஸ்ட் **key board** பார்க்காமல் டைப் செய்வான்.
- தமிழ் நாட்டில் செட்டியார் கணக்குப் படித்தவர். வாழ்க்கை வளத்தில் கணக்கு ஒரு பகுதியே என்றாலும் அந்த ஒரு பகுதி இருப்பதால் செட்டியார் ஜாதியில் ஏழையிருப்பதில்லை. பெரும் பணக்காரர்கள் செட்டியார்களே.

- உடற்பயிற்சி ஆசிரியர்கட்கு ஆயுள் அதிகம். அவர்கட்கு வியாதி வருவது குறைவு.
- மேல் நாட்டாருக்கு, அதுவும் அமெரிக்கருக்கு முதுகுவலி பெரும்பாலோர்க்குண்டு. நம் நாட்டில் அது குறைவு. அதுவும் பெண்கட்கு ரொம்பக் குறைவு. மேல் நாட்டார் நாற்காலியில் சாய்ந்து உட்காருவதால், முதுகுக்கு ஆதரவு இருப்பதால் தெம்பு இருப்பதில்லை. நாம் தரையில் உட்காருவதால் முதுகுக்கு ஆதரவில்லாமல் உட்காருவதால் முதுகுக்கு தெம்பு அதிகம். பெண்கள் எல்லா வேலையையும் தரையில் உட்கார்ந்து செய்வதால் அவர்கட்கு முதுகு வலியே தெரியாது.
- முதுகு வலி ஒரு அம்சம். உடற்பயிற்சி ஆசிரியர் தொழிலுக்-காகப் பயிற்சி செய்கிறார், செட்டியார் பண நிர்வாகத்தில் கணக்கு சிறு பகுதி. அந்த ஒரு சிறு பகுதி சிறப்பாக இருப்பதால் அவர்களிடம் பணம் பெருகுகிறது.
- ஐரோப்பாவில் குளிக்கக் கூடாது என்று ஒரு கொள்கை சில நூற்றாண்டுகளாக, 1900-1950 வரையிருந்தது. வருஷத்தில் குளிர் குறைவான மே மாதத்தில்தான் குளிப்பார்கள். அதனால் திருமணமெல்லாம் மே, ஜூனில் வருவது வழக்கம். குளிக்காததால் உடலில் அழுக்கு வாடை நெடியாக வருவதை மறைக்க பூச்செண்டு எடுத்து வருவது வழக்கம். வருஷம் முழுவதும் குளிக்காதவனுக்கு நோய் அதிகமாக வரும், ஆயுள் முடியும். நடைமுறையில் நம் நாட்டில் சுதந்திரம் வரும்பொழுது ஆயுள் 30 இருந்தபொழுது மேல் நாட்டில் ஆயுள் 60 ஆண்டுகள் இருந்தது. ஏனெனில் அவர்களுக்குச் சாப்பாட்டு வசதியதிகம். முக்கியமான குறையை மீறி ஒரு அம்சம் சிறப்பானதால் ஆயுள் இரு மடங்கிருந்தது.
- உடல் ஒரு பகுதியானாலும் உடலில் எனர்ஜி எப்பொழுதும் அதிகமாக, மிச்சமாக இருப்பது அறிவு வளர, செல்வம் பெருக, ஆயுள் வளர, உடல் நலம் பெருக உதவும்.

(தொடரும்)



# ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. M. ஜகந்நாதன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 06.09.2015

2. *வாதத்தில் தீவிரவாதியானால் உன்னைக் கண்டு பரிதாபப்பட வேண்டும். ஞானம் பரவியுயர்வதைத் தவற விட்டது உன் பாக்கியம்.*

வாதம் வென்றால் வாக்கு தோல்வியடையும், லூசி வாதத்தில் முயன்று தோல்வியை நாடினாள். காரியம் அவளுக்கு வெற்றியாகப் பலித்தது. பலித்தபின்னும் லுப்டனுக்குப் புரியவில்லை. செயலில் வாதம் ஒரு பகுதி. அடுத்த பகுதி விஷயம், வழக்கு என்போம். தர்க்க ரீதியாகப் பொதுவாக ஒன்று வென்றால், அடுத்தது தோற்கும். நக்கீரன் வாதம் பிரபலம். பீர்பால் அக்பருக்கு இதன் ஓர் அம்சத்தை பெருக்குபவன் வாழ்விலும் மற்றோர் பெரிய அம்சத்தை திருமண வாழ்விலும் எடுத்துக் கூறினார். நெடுநாளைய பெருவாரியான அனுபவம் ‘வாதத்தை விட்டுக் கொடுக்க முன்வருபவன் வழக்கை ஜெயிப்பான்’. சிதம்பரம் தீட்சிதர்கள் வாதத்தின் வலிமையை அறிந்தவர். சோழனிடம் வெற்றிகரமாகப் பயன்படுத்தினர். அதே வாதம் சோழனுக்கு அவர்களிடம் வெற்றி பெற்றுத் தந்தது. விவேகம் வாதத்தை வலியுறுத்தாது. துரதிர்ஷ்டம் வலியுறுத்தும். வெற்றிகரமான வாதத்தின் குணம் மேலும் மேலும் தன்னை வலியுறுத்தச் சொல்லும். அந்த ஆசை காலை வாரி விடும். சர்ச்சிலுக்கு அது பள்ளம் வெட்டியது. இந்த நாகரிகத்தின் சிகரத்தைக் குறள் எளியவரிடம் தோல்வியை ஏற்கும் மனப்பான்மை சான்றோர்க்குரியது எனக் கூறுகிறது. ஆன்டனி டிராலப் எழுதிய 47 கதைகளில் அவர் உச்சக்கட்டமாக உருவாக்கிய பாத்திரம் **Pallisar** பாலிசர் என்பவர். உழைப்பாளி, உத்தமன், சேவைக்காக மட்டும் செயல்படுபவர். **Gentleman to the core.** பிரபுவின் பிரபலம் படைத்தவர். அவரைப்

பாத்திரமாகப் படைத்து **Prime Minister, Dukes Children** என்று இரு நாவல்கள் எழுதினார். அவர் எழுத்து சிகரத்தைத் தொட்ட இடம் இவை. முதல் நூல் பிரபலமடையவில்லை. அடுத்தது எடுபடவில்லை. அதில் வரும் பெண் கதாபாத்திரம் மேபல். அவள் வாழ்வு தனிப்பெரும் சிறப்புடையது. நாட்டில் 4 பேர்கள் பெற்ற **Garter award** பெற்றவர் தகப்பனார். மந்திரி சபையில் நெடுநாளிருந்தவர், சூதாடி. உயர்ந்த இடம், தாழ்ந்த பழக்கம். சுமார் 10 அல்லது 12 பிரபல இளைஞர்கள் பெரும் சொத்து படைத்தவர் மேபலை மணக்க விரும்பினர். அவள் சொத்து முழுவதும் தகப்பனார், சகோதரன் சூதாட்டத்தில் போய் விட்டது. பெண்ணின் அழகு பிரபலமானது. எவரும் அவள் அழகிற்கு ஈடில்லை. அழகு சௌந்தர்யம் - புற அழகு - மட்டுமல்ல. அறிவால் மிளிரும் அழகு அவளுடையது. 21 வயதில் அவளுக்கு 30 வயது நிதானம் உண்டு. சொத்து கண்முன் அழிவது அவள் மனத்தைத் தொடவில்லை. மாமன் மகன் **Treger** டிரிகர். இவளுக்கு சமமான அறிவும், வலிமையும், நிதானமும் உடையவன். இளம் வயது நட்பு இனிமையான காதலாயிற்று. இருவருக்கும் பணமில்லாததால் திருமணம் இயலாது. நட்பு உயர்ந்தது, விஸ்வாசம் முழுமையானது. 21-ம் வயதில் இருவரும் திருமணம் இயலாது என முடிவெடுக்கின்றனர். மேபல் அவனுக்கு விடுதலை தருகிறாள். அவனை விடுவித்தாள். அவளால் மனதால் விடுதலை பெற்று அடுத்தவரை கணவனாக ஏற்க மனம் இடம் தரவில்லை. இந்த நிலையில் சில்வர் பிரிட்ஜ் வருகிறான். இவன் முன்னாள் பிரதமர் முதல் மகன். நாட்டில் அதிக சொத்துள்ளவன். அவனால் விளையாட்டிற்காகவும் பொய் சொல்ல முடியாது. மெய் விஷயத்தில் மேபலுக்கும் கிட்டதட்ட அதே மனநிலை. சில்வர் பிரிட்ஜ் புயலாகப் புரள்பவன். பயங்கர வேகத்திலும் மனம் நிதானமானது. நிலையை இதுவரை இழந்தறியான். அன்று இங்கிலாந்தில் எந்தப் பெண்ணும் விரும்பும் இளைஞன் அவன். இவன் கல்லூரியில் சிறு விஷமம் செய்து வெளிவந்தவன். மனம் விஷமத்திலில்லை. வயதும் சந்தர்ப்பமும் விஷமம் செய்தது. படிப்பு போயிற்று. அதை



நஷ்டமாகக் கருத முடியாத பெரு வாழ்வு அவன் அக வாழ்வு. சரியில்லாத நண்பர்களைச் சரியாக நடத்துபவன். ரேஸில் அவன் வயதினர் £100 பெற்றாலும், இழந்தாலும் உலகம் வியக்கும். 1000 பவுனை அர்த்தமற்றதாக நினைக்கிறான் என்பதால் 70,000 பவுன் பந்தயத்தில் வந்து, ஏமாற்றப்பட்டு, இழந்தான். நிலைகுலையவில்லை, நஷ்டம் கண்ணிற்குத் தெரியவில்லை, மனத்தைத் தொடவில்லை. 12 பேரை மறுத்த மேபலை அவன் நெருங்கி வந்து உண்மையாக மணக்கும்படி கேட்கிறான். வாய்தவறி தகப்பனாரிடம் கூறுகிறான். அவர் மகிழ்ந்து மலர்ந்து பெண்ணை ஏற்க விரும்பினார். 21 வயது பெண் விவேகம், அறிவு, நிதானம், அழகு, அந்தஸ்து நிரம்பி அனைவரையும் கவருகிறாள். சில்வர் பிரிட்ஜ் பல முறை வந்து பிரியமாகக் கேட்கிறான். அவளுக்கும் இது பெரிய சந்தர்ப்பம். இந்த நேரம் ஓர் அமெரிக்க அழகி வருகிறாள். உலகமே அவளைக் கண்டு அதிர்ந்து பிரமிக்கிறது. அவள் உள்ளம் புரட்சி வீரம் பெற்றது. உருவம் அழகால் சிறப்படைவதற்குப் பதிலாக அழகு அவள் உருவத்தால் உற்சாகம் பெறுகிறது. அனைவரையும் அளவுகடந்து கவரும் அவள் அழகை மேபல் பாராட்டுகிறாள். சில்வர் பிரிட்ஜ் தன் நிலையிழந்து அவளுடன் போகிறான். மேபல் பார்த்து மனத்தால் மறுக்கிறாள். அவன் அமெரிக்கப் பெண்ணை மணக்க இயலாது என அவள் அறிவாள். தன்னை மறந்து அவளுடன் போகும் சில்வர் பிரிட்ஜ் மனம் திருமண விஷயத்தில் மேபலை ஏற்றுக் கொண்டது அசையவில்லை. தன் தகப்பனாருக்கு முன் தலைமுறை மோதிரத்தை மேபலுக்கு பரிசாக அளிக்கிறான். மறுத்தாள், வாதத்தை ஆரம்பித்தாள். வாதம் சரியானது. எல்லாக் கேள்விகளும் கேட்கிறாள். வாதம் ஜெயிக்கும் என அறிவாள். வாதம் முழுவதும் வென்றது. வழக்கு தோற்றது. தோற்றபின் அவள் எடுக்கும் பெருமுயற்சி, இழந்ததை அவள் ஏற்கும் மனப்பான்மை, இலக்கிய நயத்தோடு எழுதப்பட்ட நாவலிது.

சங்கரர் சென்ற இடமெல்லாம் வாதத்தில் வென்றார். நாடு முழுவதும் அவரை 1000 ஆண்டுகள் ஏற்றது. இது பெரும் வெற்றி. தத்துவம் உயர்ந்தால் வாதம் வலுவிழக்கும். இன்று

நம் நாட்டில் “மாயப் பிரபஞ்சம்” என்பதைக் கேட்கவும் மனிதரில்லை. வாழ்வை உயர்த்தி பெருமளவில் விரிவுபடுத்தி வாழ்ந்து அனுபவிக்கும் இளைஞர்கள், பெரியவர்கள், 10 A/C, 8 வாட்ச் வைத்துள்ளனர். இவர்கள் வாழ்வில் உயர்ந்த உத்தமர்களில்லை எனினும், அதுபோன்ற உத்தமர் வாழ்விலும் வாழ்வை அனுபவிக்கும் இந்த அம்சம் உள்ளே வந்து ஆக்ரமித்துக் கொண்டது. வாதம் பெரியது. பெரு விஷயங்களையும் காப்பாற்றவல்லது. என்றாலும் அடிப்படையில் வாதம் வாழ்க்கை மிளிர உதவாது. ஆன்மிக ஞானம் அதற்குரியதல்ல. பகவான் எந்த விஷயத்தையும் சுட்டிக் காட்டுவார். பிருந்தாவனத்தை அவர் சுட்டிக் காட்டுவது **‘This humorous world’** — ‘இந்த இனிய சுவையுடைய உலகின் நகை முகம்’ என அவர் கூறும் பொழுது, வந்த வழியெல்லாம், திரும்பப் போன வழியெல்லாம் ஞானம் மணிகளாக சிதறிக் காணப்படும்.

(தொடரும்)

## ஜீவிய மணி

*வேலையைச் செய்து முடிக்கத் திறமை வேண்டும். புத்தகம் புரிய அறிவு தேவை. அது போல் அஞ்ஞானம் ஞானமாக மாற ஆன்மிக ஞானம் தேவை. மனம் பெற்ற ஞானம் போதாது. இயற்கைச் சக்திகள் முரணானவை. அவற்றை விலக்கியே செயல்பட முடியும். அது வாழ்வுக்குரிய செயல்கள். அச்சக்திகளை விலக்காமல், இணைத்து சுமுகமாகச் செயல்படச் செய்வது சிரமம். அச்சுமுகம் புதைந்துள்ள ஆத்மாவை வெளிவரச் செய்யும். பணமில்லாதவன் பிறருக்கு உதவ நினைப்பான். உதவுவதாகக் கூறுவான். அடிக்கடியும் சொல்வான். பணம் வந்து விட்டால் சொல்லமாட்டான். உதவி செய்யமாட்டான். பணம் வந்தபின் கொடுக்க முன்வருவது பெருந்தன்மை. அது அரிது. மனித குரு சித்தி பெற்றவர். தான் பெற்ற சித்தியைப் பிறருக்குத் தர முடியும். எவனொருவன் தன் ஆன்மிக ஜீவனைக் கண்டு கொண்டானோ, அவனால் பிறருக்கு ஆன்மிக உதவி செய்ய முடியும்.*

*ஆன்மிகம் அகத்திற்குரியது. அது தரும் சித்தி, ஞானம் அனைத்தும் அகத்திற்குரியவை. அவை எதுவும் புறத்திலில்லை.*



# The Life Divine – Outline
## தமிழ்

கர்மயோகி

*அத்தியாயங்களின் சிறு குறிப்பான விளக்கம்:-*

**அத்தியாயம்-1:**
ஆதிநாளிலிருந்து மனிதன் தன் மூலமான பிரம்மத்தை அடைய முயல்கிறான். இடையில் விடாவிட்டால் வெற்றி பெறுவான்.

**அத்தியாயம்-2:**
அவன் காண்பது பிரம்மமல்ல, ஜடம். ஜடத்தை அறிவால் அறிய முடியாது. ஜீவியத்தால் ஜடமும், பிரம்மமும் சக்தியென அறியலாம்.

**அத்தியாயம்-3:**
சன்னியாசி முடிவான பிரம்மத்தை முழுமையாகக் கண்டவர். எவ்வளவு பெரியதானாலும் அது பகுதியே. முழுமையல்ல.

**அத்தியாயம்-4:**
ஜடமும், பிரம்மமும் பிரபஞ்ச ஜீவியத்தில் சந்தித்தது போல பிரம்ம ஜீவியத்தில் சந்தித்து பரம்பொருளாகும். உலகம் அனைத்தும் பரம்பொருளே.

**அத்தியாயம்-5:**
மனம் சிருஷ்டியில் மனிதனை பிரம்மத்திலிருந்து 18 வகையாகப் பிரித்தது. பரமாத்மா, பாதாளம் அதில் ஒரு வகை. இரண்டையும் இணைப்பது மனித இலட்சியம்.

**அத்தியாயம்-6:**
மனிதனுக்கு மனிதன், பிரபஞ்சம், பிரம்மம் என்ற 3 அம்சங்களுண்டு.

**அத்தியாயம்-7:**
அகந்தை நமது ஆத்மாவில்லை. அது இடைப்பட்ட தற்காலிகமானது.

**அத்தியாயம்-8:**

வேதாந்தம் 4 பெரிய சூத்திரங்களைக் கண்டது. சத் புருஷனைக் கண்டாலும், அதற்கும் அகந்தைக்குமுள்ள தொடர்பு ரிஷிகள் எழுப்பிய தலையாய ஆன்மிகப் பிரச்சனை.

**அத்தியாயம்-9:**

அகந்தை அழிந்து உலகைச் சமுத்திரமான சக்தியாகக் கண்டால் அது ஜீவனாகவும், ஜீவியமாகவும் காட்சியளிக்கிறது.

**அத்தியாயம்-10:**

சித்-சக்தி அதனுடைய சக்தி. அது ஜீவனுள்ள சக்தி, விரயமற்றது.

**அத்தியாயம்-11**

சச்சிதானந்தம் ஆனந்தத்தைப் பொருட்களில் வெளிப்படுத்தும் பொழுது மனிதன் ஆனந்தத்தை விட்டு பொருட்களை நாடி வலியை உணர்கிறான்.

**அத்தியாயம்-12**

வலியை விலக்க ரிஷிகள் சந்தோஷத்தையும் விரதமாக விலக்கினர். பகவான் வலியை உணர்ச்சியாக ஏற்று திருவுருமாற்றத்தால் ஆனந்தமாக்க வேண்டும் என்கிறார்.

**அத்தியாயம்-13:**

பரம்பரை மாயையை இல்லாதது எனக் கூறுகிறது. மாயை பிரம்மத்தை உலகமாக்க 'அனைத்தும் அனைத்துமான' பிரம்மத்தை 'அனைத்தும் ஒரு ஜீவாத்மாவிலும், ஒவ்வொரு ஜீவாத்மாவும் அனைத்திலும்' என மாற்றியது என பகவான் கூறுகிறார். **(all is in all – all is in each and each is in all)**

**அத்தியாயம்-14:**

சத்திய ஜீவியம் சச்சிதானந்தத்திற்கும் மனத்திற்கும் இடையேயுள்ளது. இது உலகைப் படைத்தது.



**அத்தியாயம்-15:**

சத்திய ஜீவியத்தின் ஜீவியம் காலம், இடத்தை சிருஷ்டிக்காக உற்பத்தி செய்தது.

**அத்தியாயம்-16:**

இறைவன், ஜீவாத்மா, மனிதன் என்ற 3 நிலைகள் சத்திய ஜீவியத்திற்கு உண்டு.

**அத்தியாயம்-17:**

தெய்வீக ஆன்மா சச்சிதானந்த லீலையில் உள்ளது. இது எந்த நேரமும் பிரம்மத்தின்முன் உள்ளது. இதற்குள் சத்திய ஜீவிய வாழ்வின் 3 நிலைகள் (வேதம் கூறுவது) உள்ளன.

**அத்தியாயம்-18:**

சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிந்து அவற்றிடையே மனம் உற்பத்தியாகிறது.

**அத்தியாயம்-19:**

மனம் தன் சக்தியால் வாழ்வை உற்பத்தி செய்தது.

**அத்தியாயம்-20:**

மரணம் வாழ்வை நித்தியமாக்குகிறது.

**அத்தியாயம்-21:**

ஆசை உயர்ந்து அன்பாகிறது.

**அத்தியாயம்-22**

சக்தியும் ஜீவியமும் பிரிந்துள்ளன. அவை உயர்ந்து சத்திய ஜீவியத்தில் இணைகின்றன.

**அத்தியாயம்-23**

சைத்திய புருஷன் நம் உண்மையான ஆத்மா.

**அத்தியாயம்-24**

ஜடம் ஆனந்தமய புருஷன்.

**அத்தியாயம்-25**

ஜடம் நம் பார்வையால் ஏற்பட்டது. நம் பார்வை மாறினால் ஜடம் மறையும். அஞ்ஞானம், தமஸ், பிரிவினை தடை.

**அத்தியாயம்-26**

பரிணாமத்திற்கு 7 தத்துவங்கள் உண்டு. ஒரு சமயத்தில் ஒரு தத்துவம் வேலை செய்யும்.

**அத்தியாயம்-27**

சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம் என்ற 4 தத்துவங்கள் தலைகீழே மாறி ஜடம், வாழ்வு, சைத்திய புருஷன், மனம் என்ற உலகமாக சிருஷ்டிக்கப்பட்டது.

**அத்தியாயம்-28**

சத்திய ஜீவியத்தை அடையும் சூட்சும இரகஸ்யத்தைக் காண பகவான் 10 ஆண்டுகள் முயன்று முடிவாக மேலே போக முதலில் கீழே அடி மனம் போய் அங்கிருந்து உயர்ந்து ஆன்மிக மனம் வழியாக சத்திய ஜீவியத்தை அடைய வேண்டும் எனக் கண்டார்.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் குறையை குறையாக நினைக்கிறோம். ஆன்மா விழிக்க குறை அவசியம் என்பது பகவான் விளக்கம். பிடியின்றி கத்தி வெட்டாது. கரையின்றி நதி ஓடாது. கத்தியின் கூர்மை வெட்ட கூர்மையற்ற பிடி வேண்டும். நீரோட்டம் நிறைந்து நதி பெருக இரு மருங்கிலும் தடை செய்யும் கரை வேண்டும். ஆன்ம விழிப்பால் ஜீவன் விழிப்படைகிறது. ஆன்மா ஜீவனின் சிகரம். ஜீவன் கரணங்களின் தொகுப்பு. அத்தொகுப்பில் ஆன்மாவும் ஒரு பகுதி.

மனிதன் சத்திய ஜீவனாக முடியுமா என்ற கேள்வி மனித குலத்திற்குண்டு. மனிதன் விழிப்படைய ஜீவனும், ஆன்மாவும் விழிப்படைய வேண்டும். அதற்கு மேலிருந்து சத்திய ஜீவியம் வருவது அவசியம். அதனால் மனிதன் சத்திய ஜீவனாக முடியுமா என்ற கேள்வி அர்த்தமற்றுப் போகிறது.



## நெஞ்சுக்குரிய நினைவுகள்

கர்மயோகி

### II. மரபுக்கும், பூரண யோகத்திற்கும் உள்ள மாறுபாடுகள்

1. **மரபு தேடுவது மோட்சம்.**

   பகவான் நாடுவது திருவுருமாற்றம்.

2. **மரபு உலகையும், வாழ்வையும், பெண்ணையும், செல்வத்தையும் துறந்து மோட்சத்தை நாட வேண்டுகிறது.**

   பூரண யோகத்தில் வாழ்வு தெய்வீகமானது. உலகம் பவித்திரமானது. பெண் புனிதமானவள். செல்வம் யோகத்திற்கு அவசியமான அடிப்படை.

3. **உடல் மரபில் புறக்கணிக்கப்பட வேண்டும்.**

   இங்கு உடல் வெண்கலமாக தெய்வீக உடலாகத் திருவுருமாற்றப் பட வேண்டும். யோகத்தைப் பூர்த்தி செய்வது உடல்.

4. **மரபு மேலெழுந்து சென்று வானுலகை அடைகிறது. பாதாளத்தை விலக்குகிறது. இருள் இருளாகவே உலகில் நிலைக்கும்.**

   பூரணயோகம் பாதாளத்தை திருவுருமாற்றுகிறது.

5. **இறைவன் உலகைப் படைத்தார் என்பது மரபு.**

   இறைவனே உலகமாக மாறினார் என்பது பூரண யோகம்.

6. **பிரம்மா (மனம்) உலகைப் படைத்தார் என்பது மரபு.**

   சத்திய ஜீவியம் உலகைப் படைத்தது என்பது ஸ்ரீ அரவிந்தம்.

7. **ஜீவாத்மா பரமாத்மாவுள் கரையும் என்பது மரபு.**

   ஜீவாத்மாவே பரமாத்மாவாகும் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

8. **மரபு வலியை விலக்க சந்தோஷத்தையும் மறுக்கிறது.**

   பூரண யோகம் வலியை ஏற்று சந்தோஷமாகத் திருவுருமாற்றுகிறது.

**9. மரபு பாதாளத்தை விலக்குகிறது.**

ஸ்ரீ அரவிந்தம் பாதாளத்தையும், பரமாத்மாவையும் தன்னில் இணைத்து பாதாளத்தை ஒளிமயமாகத் திருவுருமாற்றுகிறது.

**10. காலம், காலத்தைக் கடந்தது என்ற இருநிலைகளை மரபு கூறுகிறது.**

அத்துடன் மூன்றாம் நிலைக் காலம் என்பதையும் ஸ்ரீ அரவிந்தம் சொல்கிறது.

**11. உலகில் நல்லது, கெட்டது என இருவகை என்பது மரபு.**

உலகில் நல்லது மட்டுமேயுண்டு. நம் பார்வையின் குறையால் பல கெட்டதாகக் காணப்படுகிறது என்பது ஸ்ரீ அரவிந்தம்.

**12. வாழ்வை மாயை என மரபு கூறுகிறது.**

வாழ்வு பூலோக சுவர்க்கம், அற்புதம் என்கிறது ஸ்ரீ அரவிந்தம்.

**13. மரபு அகந்தையை அனுமதிக்கிறது. அகந்தையையே சத் புருஷன் எனவும் நினைக்கிறது.**

ஸ்ரீ அரவிந்தம் அகந்தைக்கு இடமே வைக்கவில்லை. அகந்தை முழுமையாகக் கரைய வேண்டும் எனக் கூறுகிறது.

**14. மரபு சக்தியை ஜடம் எனும்.**

ஸ்ரீ அரவிந்தம் சக்தி ஜீவனுடையது எனும்.

**15. உலகில் விரயம் உண்டு என்பது மரபு.**

உலகில் விரயமில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம்.

**16. உலகம் லீலை என்பது மரபு.**

ஆடுபவனும் அவனே. ஆட்டமும் அவனே. அரங்கமும் அவனே என்பது ஸ்ரீ அரவிந்தம்.

**17. மாயை என்பது இல்லாதது என்று மரபு கூறுகிறது.**

மாயை பிரம்மத்தின் சக்தி உலகை சிருஷ்டித்தது என்பது ஸ்ரீ அரவிந்தம்.



**18. மரபு - கடவுளும், உலகமும் பிரிந்து நிற்பவை.**

ஸ்ரீ அரவிந்தம் - கடவுளே உலகம், உலகமே கடவுள், ஒன்றானவை.

**19. மரபு - சிருஷ்டியில் 7 தத்துவங்கள் உள்ளன. சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம், மனம், வாழ்வு, உடல்.**

ஸ்ரீ அரவிந்தம் - நாம் 8 தத்துவங்களை ஏற்கலாம். சைத்திய புருஷனையும் ஏற்போம்.

**20. மனத்திலிருந்து எழுந்து மேலே போய் பிரம்மத்தை அடைவது மோட்சம் - மரபு.**

ஸ்ரீ அரவிந்தம் - மனத்திலிருந்து கீழே போய் அடி மனத்தில் பாதாளத்தை அடைந்து எழுந்து மேலே போய் திருவுருமாறுவது சத்திய ஜீவியம்.

**21. ஆத்மா, புருஷா, ஈஸ்வரா என்பவை மூன்று - மரபு.**

அவை மூன்றும் ஒன்றே - ஸ்ரீ அரவிந்தம்.

**22. ஜீவாத்மா பரமாத்மாவை அடைந்து முடிகிறது - மரபு.**

ஜீவாத்மா பரமாத்மாவாகி இரண்டையும் பிரம்மம் முடிவாகத் தன்னுள் அடக்குகிறது - ஸ்ரீ அரவிந்தம்.

**23. ஞானம், அஞ்ஞானம் இருநிலைகள் - மரபு.**

ஞானம் அஞ்ஞானமாகத் தன்னை மாற்றியமைக்கிறது - ஸ்ரீ அரவிந்தம்.

**24. மரபு - அஞ்ஞானத்தைவிட ஞானம் உயர்ந்தது.**

ஸ்ரீ அரவிந்தம் - ஞானத்தைவிட அஞ்ஞானம் உயர்ந்தது.

**25. மரபு - அஞ்ஞானம் விலக்கப்பட வேண்டும்.**

ஸ்ரீ அரவிந்தம் - அஞ்ஞானம் ஞானமாகத் திருவுருமாற வேண்டும்.

**26. மரபு - ஆண்டவன் உலகையும் நம்மையும் சிருஷ்டித்தான். நாம் மீண்டும் அவனை அடைய வேண்டும். அது மோட்சம்.**

ஸ்ரீ அரவிந்தம் - ஆண்டவன் உலகமாக மாறினான். பரிணாமத்தால் மீண்டும் உலகம் இறைவனாக வேண்டும்.

27. **மரபு - வாழ்வு மையம் மனம்.**
ஸ்ரீ அரவிந்தம் - சத்திய ஜீவியம் வாழ்வு மையம்.

28. **மரபு - பாவம் செய்து ஜீவன் வானுலகினின்று பூவுலகம் வந்து பாவத்தை நிவர்த்தி செய்து மீண்டும் வானுலகம் திரும்ப வேண்டும்.**
ஸ்ரீ அரவிந்தம் - இறைவன் சிருஷ்டியில் ஜடமாகி, பரிணாமத்தால் வாழ்வு, மனமாகி, சத்திய ஜீவியமாகி, சச்சிதானந்தத்தின் ஆனந்தத்தைக் கடந்த பேரானந்தத்தை பெற வேண்டும்.

29. **மரபு - இது மனிதனுக்குரிய தவம்.**
ஸ்ரீ அரவிந்தம் - பூரண யோகம் மனிதனால் செய்ய முடியாது. அவனுக்குரியது சரணாகதி. இது இறைவனுடைய யோகம்.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பயம் உள்ளவரை ஒருவன் விலங்காவான். பயம் நீங்கிய பிறகே ஒருவன் மனிதன் என்ற தகுதியைப் பெறுகிறான் என்கிறார் அன்னை. பூரண யோகம் செய்ய ஒருவன் மனிதன் என்ற தகுதியைப் பெற அவனுடல் காயகல்ப சித்தி பெற வேண்டும் என்பது பகவான் சித்தாந்தம். நாம் செயல்படும்பொழுது வெளிப்படுவது மனம். செயலின் ரூபம் ஆத்மாவை வெளிப்படுத்துவதே பரிணாமம். டார்வின் கூறிய பரிணாமம் உடலின் ரூபத்தின் பரிணாமம். பகவான் கூறும் பரிணாமம் ஆத்மா பரிணாம வளர்ச்சி பெற்று அதற்குரிய ரூபத்தை உடல் பெறுவது. மனித வாழ்வு இயற்கையின் நியதிக்குட்பட்டு வளர்ந்து, இயற்கையைக் கடந்து தெய்வீக வளர்ச்சி பெற வேண்டும். மேலும் பரிணாம வளர்ச்சிக்குரிய முக்கிய இரு அம்சங்களையும் பகவான் குறிப்பிடுகிறார்.

1. சூட்சுமம் அதிகபட்சம் வளர வேண்டும்.
2. சிக்கலான முடிச்சவிழ்ந்து அது சிறப்பான திறனாக வேண்டும்.



## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

*8. ஆசியர்கள், மங்கோலியர், வெள்ளையர் என பல இனங்கள் இருந்தாலும், எந்த ஓர் இனமும் கலப்படமில்லாமல் தூய்மையாய் இன்று உலகில் இல்லை.*

*9. ஒரு கல்லைச் சிருஷ்டிப்பதற்கு இறைவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியும், மனிதனைச் சிருஷ்டிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியும் ஒன்றே. இறைவனுடைய கணிப்பில் கல்லுக்கும், மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் மிகக் குறைவு.*

*10. யோகம் முதிர்ச்சியடைந்தால், தன் கழுத்தைப் பிடித்து நெறிக்கும் கைகளிலும் இறைவனைத் தீண்டும் இன்பத்தை நுகரலாம்.*

*11. ஒருவனது ஆயுள் முடியும் காலத்தில் அவனது ஆத்மா வெளியே வந்து, அந்தப் பிறப்பின் அனைத்துச் செயல்களையும் க்ஷண நேரத்தில் விமர்சனம் செய்து, அடுத்த பிறப்பில் எங்கு ஜனிப்பது என்று முடிவு செய்து, மீண்டும் தன்னிடத்திற்குப் போய் விடுகிறது.*

*12. மிருகங்களைக் கொடுமைப்படுத்துபவன், விலங்குக்கும் கீழான உணர்ச்சியுடையவன்.*

*13. தேவாலயங்களில் வணங்குபவர்கள் பவித்திரமாக இருக்கும்வரை பிரதிஷ்டை செய்த தெய்வங்கள் அங்கு இருக்கும். பக்தர்களுடைய தூய்மை குறைந்த காலத்து அத்தெய்வங்கள் அங்கு இரா. வணங்குபவர்களின் தன்மைக்குத் தக்கவாறு வேறு தெய்வங்களோ, ஆவிகளோ அங்கு வந்து குடியேறும்.*

*14. பூரண யோகம் இறைவனது யோகம்; மனிதனது யோகமில்லை. மனிதன் செய்யக்கூடியதெல்லாம் தன் சரணாகதியைப் பூரணமாக்கி, இறைவனுக்குக் கருவியாக மாறுவதுதான்.*

*15. உலகத்தில் பூரண யோகம் பூரணமாகப் பலித்தால், இறைவனது சத்தியம் உலகில் வந்து நிரம்பும். அது மரணம், மூப்பு,*

பொய்மை, அறியாமை போன்றவற்றை அடியோடு அழித்துவிடும்.

16. அன்னையை ஏற்றுக்கொண்டு புதிய சத்திய வாழ்வை நாடும் பக்தன், சாஸ்திரம், சம்பிரதாயம், ஜோஸ்யம், சகுனம், நல்ல-கெட்ட நேரங்களுக்கு அப்பாற்பட்டவன். அவன் அவற்றின் ஆட்சிக்கு உட்பட்டவனில்லை.

17. மேலைநாடுகள் லௌகீகச் சிறப்பை, பொருளாதாரப் பெரு வாழ்வை நாடுகின்றன. அவை மனித குலத்திற்கு நாசம் விளைவிக்கக்கூடியவை.

18. மனிதன் தெய்வங்களைவிட ஆத்மீகத்தால் உயர்ந்தவன். தெய்வங்கள் அபரிமிதமான சக்தியுடையவை. அவற்றின் அளவு பூமியின் அளவு. ஒவ்வொரு கடவுளும் பூமி அளவு பெரியவர் ஆவர். அவர்கள் வசிக்கும் லோகம் சிருஷ்டியில் பூலோகத்தைவிட 3 நிலைகள் மேலானதாகும். ஆனால் தெய்வங்கள் சிருஷ்டி முடிய தெய்வங்களாகத்தான் இருக்க முடியும். தங்களுடைய ஆத்மீக நிலையை உயர்த்திக்கொள்ளும் திறன் அவர்களுக்கில்லை. மனிதனுக்கு ஆத்மாவும், அதன் பிரதிநிதியான (psychic being) சைத்திய புருஷனும் உண்டு. சைத்திய புருஷன் வாழ்க்கையில் செயல்படுகிறான். ஆத்மா சிருஷ்டிக்கு அப்பாற்பட்டது. சைத்திய புருஷன் சிருஷ்டியில், வாழ்க்கையில் செயல்படுபவன்; அவனுக்கு வளர்ச்சியுண்டு. அதன் மூலம் மனிதன் தன் ஆத்மீக நிலையில் தொடர்ந்து முன்னேறுகிறான். தெய்வங்களுக்கு இந்த ஆத்மாவின் பிரகிருதியான சைத்திய புருஷன் கிடையாது. ஆதலால் தங்களுக்கென ஏற்பட்ட அளவிறந்த சக்தியை அவர்கள் பிரயோகம் செய்து மகிழலாம். தங்கள் ஆத்மீக நிலையை உயர்த்திக்கொள்ள முடியாது. அவர்கள் அப்படி விரும்பினால் பூவுலகத்தில் மனிதராகப் பிறந்தால்தான் முடியும் என்பது ஸ்ரீ அரவிந்தரது கருத்து.

19. மனிதப் பிறவியில் 99% இறைவனுக்கு எதிரான சக்தியாகும்.

20. ஒரு கணம்கூட மனிதனால் (ego) தான் எனும் உணர்வை வெளிப்படுத்தாமல் செயல்பட முடியாது.



21. இதுவரை (ego) மனிதனுடைய அகந்தை இறைவனுக்குப் பெரிய சேவை செய்தது. சிருஷ்டியின் சிறப்பை இந்த அளவுக்குக் கொண்டுவந்தது இதுதான். எதிர்காலத்தில் இதுவே மனிதனுடைய ஆத்மீக வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.

22. மதங்களுடைய காலம் முடிந்துவிட்டது. எதிர்காலம் ஆன்மிகத்-திற்கேயுரியது.

23. யுகாந்த காலமாகவுள்ள சிருஷ்டியில் சிறப்பான நேரங்களுண்டு. அதை இறைவனின் 'நாழிகை' என்பர். ஆயிரமாயிரம் ஆண்டுகளில் சாதிக்க முடியாத காரியங்களை இப்படிப்பட்ட நேரத்தில் உடனே சாதிக்கலாம். இன்று அப்படிப்பட்ட ஒரு விசேஷ காலமாகும். இதை ஆங்கிலத்தில் ஸ்ரீ அரவிந்தர் Hour of God என்கிறார்.

24. தன் பாவத்தை இறைவன் அழிக்கும்பொழுது மனிதன் புளகாங்கிதமடைகிறான். தன் புண்ணியத்தை இறைவன் அழிக்கும் பொழுது மனிதன் கவலைப்படுகிறான். பாவமும், புண்ணியமும் இறைவனை அடையத் தடையாக இருப்பதை அவன் உணருவது இல்லை.

25. அற்புதங்கள் அரிபொருளாக இருக்கின்றன. அன்னையை ஆத்மாவில் பிரதிஷ்டை செய்தபின் அற்புதங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகின்றன.

26. ஒரு பாடத்தை [கணிதம், மொழி, இலக்கியம், சரித்திரம்] நன்கு கற்றுக்கொண்டால் அவனது படிப்பு முடிந்துவிடும். மற்ற பாடங்களை அவனே பயில முடியும்.

27. பணம் தெய்வத்தின் சொத்து. ஆன்மிகவாதிகள் பணத்தைப் புறக்கணித்தால், அநியாயவாதிகள் பணத்தை எடுத்துக் கொள்வார்கள். இறைவன் சார்பில் பணத்தைத் தீய சக்திகளிடம் இருந்து இறைவனுக்காகக் கொண்டுவருவது ஆன்மிக-வாதிகளின் கடமை.

28. அன்னையின் பாதம் ஊன்றிய இடமெல்லாம் ஆனந்தம் பெருக்கெடுக்கின்றது.

29. அன்னையிடமிருந்து கிடைக்கும் தண்டனையும் அவரது அருள் நிறைந்ததாகும்.

*30. உணர்ச்சிகளை, புலன்களை அவிப்பது மரபு. அது இறைவனின் திருவுள்ளமில்லை. அவற்றைத் தூய்மைப்படுத்தி இறைவனின் கருவியாக்குவதே பூரண யோகத்தின் நோக்கம்.*

*31. உடலின் ஆழத்தில் ஏராளமான சக்தி புதையுண்டிருக்கின்றது. சித்தர்கள் வெளிப்படுத்தும் சக்திகளுக்கெல்லாம் உடலே உறைவிடம்.*

*32. மனிதனுக்கு எழும் பிரச்சனைகள் எல்லாம் அவனுடைய திறமைக்கு உட்பட்டவையே. அவனை மீறிய பிரச்சனைகளை இறைவன் அவனுக்குக் கொடுத்ததில்லை.*

★★★★

### 14. ஸ்ரீ அன்னையின் கருத்துகள்

அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் அடிப்படையில் ஒருவரே. அவர்களது செயலையும், சிந்தனையையும் பிரித்துப்பார்க்க முடியாது. ஒருவர் ஓர் இடத்தில் சொல்லியதை, மற்றவர் வேறோர் இடத்தில் சொல்லியிருப்பதால் எது ஸ்ரீ அரவிந்தர் கருத்து, எது அன்னையினுடையது எனப் பல இடங்களில் தீர்மானிக்க முடியாது. கூடியவரை அவரவர் கருத்துகளை அவரவர் பெயரிலேயே கொடுக்க முயல்கிறேன்.

*1. ஒருவர் அன்னையிடம் வந்தால், அவருக்கு எந்த விஷயத்தில் அதிக ஆர்வமிருக்கிறதோ, அதையே அன்னை அவருக்கு அளிக்கிறார்.*

மனிதன் தன் தேவையை அறிவதைவிட அன்னை அவனுடைய தேவையையும், உண்மையான ஆர்வத்தையும் அறிந்துகொள்கிறார். அறிந்தபின் அவன் கேட்டதை விட்டு, கேட்காமலிருந்த ஒன்றை அவனுக்கு அளிப்பது அவர் வழக்கம்.

ஒரு பட்டதாரி ஆசிரியர். அவருக்கு உள்ளூரில் வேலை கிடைக்க வேண்டி முயன்றார். அவர் வீடு பள்ளிக்கூடத்திற்கு எதிரில் இருந்தது. அவர் பட்டம் பெற்று வந்ததும் அங்கு வேலை கேட்டார். கிடைக்கவில்லை. 3 மைல் தூரத்தில் உள்ளூரிலேயே அதனைச் சார்ந்த மற்றொரு பள்ளியில்



அவருக்கு வேலை கிடைத்தது. வீட்டிற்கு எதிரில் உள்ள பள்ளியில் வேலை கிடைத்தால் சௌகரியம் என்பதுடன், அந்தப் பள்ளி மாணவர்கள் அவரிடம் வந்து ட்யூஷன் படிக்க வசதியாய் இருக்கும். அது நடக்கவில்லை. பல ஆண்டுகள் கழிந்தன. அடுத்த பள்ளியில் அவர் சீனியர் ஆசிரியராகிவிட்டார். அன்னையிடம் பக்தி கொண்டு, ஒருமுறை ஒரு குறிப்பிட்ட பிரச்சனை தீர வந்து பிரார்த்தித்தார். பிரச்சனை தீரவில்லை. பிரார்த்தனை செய்து, பிரச்சனை தீரவில்லை என்பது கேள்விப்படாத ஒன்று. மேலும் விசாரிக்கப்போனால், சற்றும் எதிர்பாராத வகையில் அவருக்கு வீட்டிற்கு எதிரேயுள்ள பள்ளியில் வேலை கிடைத்துவிட்டது. தீராத பிரச்சனையை ஒதுக்கிவிட்டு, மறந்துவிட்டு, வேலை கிடைத்த மகிழ்ச்சியில் அவர் திளைத்திருந்தார்.

ஒருவர் அன்னையின் எதிரே சென்றவுடன் அவருடைய ஆழ்ந்த உணர்ச்சிகள் அன்னையின்மீது அலைபோல் சென்று படிகின்றன. அவர் அன்னையிடம் சொல்லிய சொற்கள் அன்னையின் காதில் விழுகின்றன. ஆனால் ஆழ்ந்த உணர்ச்சிகள் அன்னையின் ஜீவனில் படிகின்றன. அன்னையை அறியாமலேயே அவை உத்தரவு பெற்று, செயல்பட்டுவிடும். அக்காரணத்தாலேயே அன்பர் பிரார்த்தனை செய்தாலும், செய்யாவிட்டாலும், அவர் மனத்தில் ஆழத்திலுள்ள அபிலாஷைகள் அன்னையிடம் வந்தவுடன் பூர்த்தியாகின்றன. எம்.பி. சீட் கிடைக்காதவர் அன்னையிடம் பிரார்த்தனை செய்தபொழுது அவருக்கு மந்திரி பதவி கிடைத்தது. வாயால் கேட்டது **M.P.** சீட்டாக இருந்தாலும், அவர் மனத்தின் அடியில் மந்திரி பதவி இருந்தது போலும்.

(தொடரும்)

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பரிணாம வளர்ச்சி பெறும் ஆத்மாவுக்குரிய உடலாக
உடல் மாறுவது காயகல்பம்.

## அன்பர் அனுபவம்

### பரம்பொருளே நேரில் வந்து காப்பாற்றினார்.

ஐயாவின் பொற்பாதங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. கடந்த 25 வருடங்களாக அன்னையின் பாதுகாப்பில் ஆனந்தமாக இருந்து வருபவள் நான். எனது மகளின் திருமணம் அன்னையின் அருளால் 12 வருடங்களுக்கு முன்னால் நடந்தது. இந்த 12 வருடங்களாக அன்னையின் அருளால் பல இன்னல்கள் வந்த போதும் ஸ்ரீ அரவிந்தமே அவளைக் காப்பாற்றி வருகிறது என்பது கண்கூடான விஷயம். எனது மருமகன் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்து வருபவர். அதனால் நாங்கள் பல பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வந்தது. ஒவ்வொரு முறையும் பிரச்சனை வரும்போதெல்லாம் ஸ்ரீ அரவிந்தமே காப்பாற்றி வந்தது. ஆனால் இந்த முறை நடந்தது மிகவும் அற்புதம். கடந்த இரண்டு மாத காலமாக எனது மருமகன் கேட்பதை எங்களால் நிறைவேற்ற முடியாத காரணத்தால் எங்கள் மகளைவிட்டு முழுவதுமாக பிரிந்து செல்லத் தீர்மானித்து எங்களிடம் கூறினார். நாங்கள் அன்னையை மனதில் நிறுத்தி உங்கள் விருப்பம் போல செய்யுங்கள் என்று கூறிவிட்டு, அவர் பிரிந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்தோம். அப்போதுதான் மார்ச் மாத இதழில் வந்த அன்னை அன்பர் அனுபவத்தில் பரம்பொருள் செய்த அற்புதத்தைப் படித்துவிட்டு, மதர்ஸ் சர்வீஸ் சொஸைட்டிக்கு பணம் அனுப்பி பரம்பொருள் புத்தகம் அனுப்பி வைக்க கேட்டிருந்தேன். அந்தப் புத்தகம் ஏப்ரல் 6-ஆம் தேதி எங்கள் இல்லத்திற்கு வந்தது.

பரம்பொருள் வந்த நேரம் அதி அற்புதமான நேரம். அந்த நேரத்தில் எங்கள் மருமகப்பிள்ளைக்கும் எங்களுக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டு இருந்தது. பரம்பொருள் ஒரு 5 நிமிடம் முன்னதாகவும் வந்து இருக்கலாம் அல்லது 10 நிமிடம் பின்னதாகவும் வந்து இருக்கலாம். அந்த பிரச்சனை நடந்து கொண்டிருந்த அந்தத் தருணத்தில் பரம்பொருள் உள்ளே நுழைந்ததும் நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அம்மாவும் அப்பாவும் ஒருசேர வந்து நாங்கள் இருக்கும்போது ஏன் மகளே உனக்குக் கவலை என்று கூறியது போல் இருந்தது. பரம்பொருளை வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டு மார்போடு அணைத்துக் கொண்டு எங்கள் மாப்பிள்ளையிடம் பேச ஆரம்பித்தேன். அன்னையை வணங்குவதில் அவருக்கு உடன்பாடு கிடையாது. அதனால் அந்த புத்தக வரவைக் கண்டவுடன் உங்கள் அன்னை அரவிந்தரால் கூட இந்த பிரச்சனைக்குத் தீர்வு கொடுக்க முடியாது என்று கூறினார். ஆனால் நாங்கள் ஆனந்த மழையில் நனைந்து கொண்டிருந்தோம். சரிங்க மாப்ளே! நீங்கள் கேட்டதைப் போலவே விடுதலை அளித்துவிடுகிறோம் என்று கூறிவிட்டு எங்கள் அறைக்குத் திரும்பினோம்.

எங்கள் மகளிடம் பரம்பொருளைக் கொடுத்து இனி இவர்தான் உன் கணவர், கடவுள் எல்லாம். இதை தினமும் படி என்று கூறிவிட்டு நிம்மதியாக அன்று இரவு முதல் உறங்கினோம். அவளும் அன்று இரவு படித்துவிட்டு நிம்மதியாக கவலையில்லாமல் உறங்கியதாகக் கூறினாள்.

சரியாக மூன்று நாட்கள் சென்றதும், நிலைமை தலைகீழாக மாறி, அற்புதம் நடந்தது. அவருக்கு ஆதரவாக இருந்த அனைத்து உறவுக்காரர்களும் அவருக்கு எதிராக மாறி இனி இங்கே வராதே என்று சொல்லுமளவுக்கு மாறியது. அவர் எங்களிடம் தங்க முடியாமலும், உறவினரிடம் செல்ல முடியாமலும் கண்ணீர் மல்க நின்ற நிலையை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இது பொருள் பொதிந்த பரம்பொருளின் அற்புதம் தவிர வேறொன்றுமில்லை. அவர் எங்களை மிரட்டியது போக நாங்கள் மிரட்டும் அளவுக்குச் சூழல் மாறியது. இப்பொழுது ஒழுங்காகவும், அமைதியாகவும், ஒற்றுமையாகவும் இருக்கிறார்.

இந்த நிகழ்வின் மூலம் பொருள் பொதிந்த பரம்பொருள் எங்களுக்குத் தீமையைக் கண்டு பயப்படாமல் இருக்கும் அளவுக்கு அதிகமாக தைரியத்தைக் கொடுத்திருக்கிறது. ஐயாவின் திருப்பாதங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்னை இலக்கியம்**

## மீன்கொடி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 5. நான் வளர்ந்த விதம்

குடும்பமோ, உறவினர்களோ இல்லாதவரை அநாதை என்பார்கள். அவன் தனிமையில் உழன்று அகத்திலும், புறத்திலும் சமூக நிறுவனத்தின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவனாக இருப்பான்.

குடும்பமும், உறவினர்களும் இருந்தும் நான் எப்போதும் தனிமையில் உழலும் அநாதையாகத்தான் என்னை அறிந்திருக்கிறேன். நான் அகத்தில் சமூக நிறுவனத்தின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தாலும், புறத்தில் அந்த எல்லைகளுக்கு முழுக்க உட்பட்டவனாகவே நடந்து வந்திருக்கிறேன்.

பெரும்பாலான மனிதர்கள் தாங்கள் இன்னமும் விலங்குகளாகத்தான் இருக்கிறோம் என்பதை அறிவதில்லை. பெரும்பாலான குடும்பங்கள் தாங்கள் இன்னமும் வீடுகளாகத்-தான் இருக்கிறோம் என்பதை அறிவதில்லை. நான் சிறிய வயதிலேயே அதை அறிந்திருந்தேன்.

குடும்பம் என்பது புற அருகாமையாலோ, ஒன்றாக வாழ்வதாலோ உருவாவதில்லை. அகத்தில் பூசலார் ஒவ்வொரு கல்லாக தானே அடுக்கிக் கட்டியது போல, எவரிடமும் எதுவும் சொல்லாமல் மனிதன் தானாகவே கண்ணாடி பாளங்களை ஒவ்வொன்றாக அடுக்கி, பல வருடங்களில் கட்டும் கோவில் குடும்பம். குடும்பத்தினரில் ஒருவர் சின்னஞ்சிறு சொற்கல் எறிந்தாலும் பொடிப்பொடியாக நொறுங்கி விழக் கூடிய கண்ணாடிக் கோவிலது.

எனக்கு ஐந்து வயதாகும்போது என் அண்ணார்களும், அக்காவும் உயர்நிலை பள்ளிக்குச் சென்று விட்டிருந்தனர். அப்பாவும், அம்மாவும் எங்கோ போய்விட்டனர். பாட்டியும், சித்தப்பாவும் வேறு வீட்டில் இருந்தனர். தாத்தா நான் எழுமுன் கம்பெனிக்குச் சென்றுவிட்டு, நான் தூங்கியபின் வீடு திரும்புவார். கவர்னசத்தை எப்போதும் சிடுசிடுப்பார். பெரிய வீட்டில் பலர் நடுவே தனியாக வாழ்ந்தேன்.



என் அண்ணார்கள் போல, அக்கா போல பேசி, நடந்து கொள்ள முயன்றபோதெல்லாம் கேலிக்கு ஆளானேன். வயது வித்தியாசத்தின் காரணமாக, அவர்களது வயதிற்குரிய தன்மையின் காரணமாக நான் எத்தனை முயன்றும் அவர்களால் என்னோடு பழக முடியவில்லை. ‘ஓடாதே’, ‘ஆடாதே’, ‘பேசாதே’, ‘தொந்தரவு செய்யாதே’ போன்ற சொற்கள்தான் என் மூத்தவர்கள் என்னிடம் எப்போதும் பேசியவை.

குழந்தையை வேலைக்கு வைப்பது குற்றம் என்பது என் குடும்பத்தினருக்குத் தெரியவில்லை. குழந்தைக்கும் தெரியவில்லை. என் மூத்தவர்களின் அன்பைப் பெற வேண்டுமென்பதற்காக அவர்கள் சொல்லும் அத்தனை எடுபிடி வேலைகளையும் சலிக்காமல் செய்வேன். பதிலுக்கு ஒரே ஒரு அன்பான சொல்லும் கிடைத்ததில்லை. அவர்கள் என்னை துன்புறுத்தியதோ, கடுமையாகப் பேசியதோ இல்லை. அப்படிச் செய்திருந்தால் கூட சந்தோஷப்பட்டிருப்பேன். அவர்கள் என்னை முழுமையாகப் புறக்கணித்தார்கள். தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, குற்றேவல் செய்ய மட்டுமே என்னைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஒரு கட்டத்தில் அதிலேயே நான் நிறைவு காணத் தொடங்கி விட்டேன். மூத்தவர்கள் அப்படி இருப்பது நியாயமே என்று நம்பத் தொடங்கினேன். என்னை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நான் தவறு செய்து விட்டது போல எனக்குத் தோன்ற ஆரம்பித்துவிட்டது. எவரிடமும் எதையும் கேட்டதில்லை. கேட்க முடிந்ததில்லை. நானாக எந்த முடிவும் எடுத்ததில்லை. எவரும் என் முடிவையோ, என்ன நினைக்கிறேன் என்றோ கேட்டது இல்லை. எவரேனும் இதைச் செய் என்று என்னிடம் சொன்னால் மட்டுமே நான் செயல்படுவேன்.

எவரும் அடுத்தவரைப் பற்றி தாத்தாவிடம் குறை சொன்னதில்லை என்பதால் வீட்டில் நடப்பது எதுவுமே தாத்தாவிற்குத் தெரிய வந்ததில்லை. நேரம் கிடைக்கும்போது மீசை தாத்தா மட்டுமே என்னை எங்காவது வெளியே அழைத்துச் சென்று உணவு விடுதிகளில் இனிப்பு ஏதாவது வாங்கித் தருவார். அப்போது தன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி வேடிக்கையாகச் சொல்வார். அந்த நாட்களில் என் மீதும் அன்பு செலுத்தும் மனிதர்கள் உண்டு என்ற அறிதல் என்னை உலகை வென்றவனாக உணர வைக்கும்.

சற்று வளர்ந்தபின் புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினேன். துப்பறியும் நாவல்களோ, கண்ணீர் கதைகளோ, காமக் கதைகளோ, நகைச்சுவை கதைகளோ என்னை ஒருபோதும் கவரவில்லை. ஆரம்பத்தில் அறிவார்ந்த புத்தகங்களை ஆர்வத்துடன் வாசித்து வந்தேன். பின் அவற்றில் ஆர்வமிழந்து ஆன்மிகத் தீண்டல் இருக்கும் தீவிரமான நூல்களை, கட்டுரைகளை, கதைகளை மட்டும் வாசிக்கத் தொடங்கினேன். அவை என்னைப்பற்றி, என் உலகைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டின.

ஏழாவது வகுப்பு முடிப்பதற்குள் பல முக்கியமான நாவல்களை வாசித்து விட்டிருந்தேன். வீட்டிற்கு அருகே பெரிய அரசாங்க நூலகம் இருந்தது. அதன் நூலகர் தாத்தாவின்மீது மிகுந்த மரியாதை கொண்டவர். அதனால், நான் கேட்கும் புத்தகங்களைத் தேடி எடுத்துத் தருவார். ‘தாத்தாவை விசாரித்ததாக சொல்லுப்பா’ என்று அடிக்கடி என்னிடம் வேண்டுகோள் விடுப்பார்.

ருஷ்ய நாவல்களைத் தவிர பிற வெளிநாட்டு நாவல்களை என்னால் மனம் ஒன்றி வாசிக்க முடியவில்லை. மேதைகள் எழுதியவையே என்றாலும், என் உலகம் வேறாகத்தான் இருந்தது. இந்திய நாவல்களை வாசித்தபோது மட்டும் கதாபாத்திரங்களாகவே என்னால் மாற முடிந்ததால் எல்லா இந்திய மொழிகளிலும் உள்ள சிறந்த நாவல்களை வாசித்தேன். அந்த பாத்திரங்களின் வாழ்க்கையை நானும் வாழ்ந்து அனுபவங்கள் பெற்றேன்.



வங்காளத்து தாராசங்கர் பானர்ஜியின் ‘ஆரோக்கிய நிகேதனம்’ வாசித்தபோது அலோபதி டாக்டர் போஸாகவும் என்னை அறிந்தேன், அவரது மறுபக்கமான ஆயுர்வேத மருத்துவர் மஷாயாகவும் என்னை அறிந்தேன். காதலி மஞ்சரியாக மஷாயின் மடியில் சரிந்தேன். கன்னடத்து சிவராம காரந்தின் ‘மண்ணும் மனிதரும்’ வாசித்தபோது அதில் வரும் சுதந்திரப் போராளி ராமனும் நானே, அவன் தாயான நாகவேணியும் நானே என்றுணர்ந்தேன். மராட்டிய காண்டேகரின் ‘யயாதி’யை வாசித்தபோது சர்மிஷ்டையாகவும், தேவயானியாகவும், யயாதியாகவும், புருவாகவும் சில நாட்கள் வாழ முடிந்தது.

நவீன மேதைகளின் நாவல்கள் முடிந்தபின் நான்காயிரம் வருடங்கள்வரை பின்னோக்கிச் சென்றேன். மகாபாரதம் என் கதை, நான் நிகழ்த்தியது, அதில் வரும் அனைவரும் நானே என்று நம்பத் தொடங்கினேன்.

இப்போது என் உலகம் மிகவும் விரிந்து விட்டது. எனக்குத்தான் எத்தனை குடும்பங்கள்! எத்தனை உறவினர்கள்! எத்தனை எத்தனை அனுபவங்கள்! ஒவ்வொரு நாவலும் என் குடும்பமாக மாறி விட்டது.

அதனால் எனக்குள் விசித்திர மாறுதல் நிகழ்ந்தது. எல்லோரையும் அவரவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே தயங்காமல் ஏற்றுக் கொள்ள முடிந்தது. எல்லோரையும் ஒரு காரணமும் இன்றி நேசிக்க முடிந்தது. அன்பைத் தர முடிந்தது. இருந்தாலும் என் மூத்தவர்களின் அன்பைப் பெற வேண்டும் என்ற இளவயது ஆவல் அழியாமல் அணைக்க முடியாத கங்கு போல என் நெஞ்சில் இருந்து வந்தது.

வீடு, பள்ளி, கல்லூரி, நூலகம் தவிர வேறெங்கும் நான் போனதில்லை. வெளியூர்களுக்கு அண்ணார்கள் போகும்போது எப்போதாவது என்னையும் அழைத்துப் போவார்கள். அப்போதெல்லாம் தாத்தா அந்த ஊர்களில் இருக்கும் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஏதாவது பரிசுகளை என் மூலம் அனுப்பி வைப்பார். ‘உனக்கென்று நான்கைந்து பேர்களாவது வேண்டுமே!’ என்று கூறுவார். என் சிறு

வயதிலிருந்தே என்னைப் பற்றிய கவலை மீசை தாத்தாவிற்கு உண்டாகிவிட்டது.

என் அக அனுபவங்களின் நடுவே தட்டுத் தடுமாறி கல்லூரிப் படிப்பையும் முடித்தேன். ஜவுளி அண்ணியின் தூண்டுதலால் ஓரளவிற்கு எளிய சாப்ட்வேர் எழுதப் பழகிக் கொண்டேன். வேலைக்குப் போனால் இலக்கிய வாசிப்பு தடைபடும் என்று தோன்றியதால் சொந்தமாக சாப்ட்வேர் கம்பெனி நடத்தப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டேன். சிறிய அளவில் அவ்வப்போது வருமானம் வந்து கொண்டிருந்து. செலவு செய்யத் தெரியாத எனக்கு அதுவே பெரும்புதையல் போலிருந்தது. எனக்கு வந்ததை என் மூத்தார்களின் குழந்தைகளே செலவு செய்து விடுவார்கள்.

என்னால் உருப்படியாக எதையும் செய்ய முடியும் என்று என் குடும்பத்தினருக்கு நம்பிக்கை இல்லை. என்றாலும், யாரையும் எதுவும் கேட்காத, யாருக்கும் தொந்தரவு தராத, இட்ட சில்லறை வேலைகளை மறுக்காமல் உடனே செய்யும் ஜீவராசி என்பதால் என் சிறு அறையில் நிம்மதியாக இருந்து வர முடிந்தது.

## 6. கவர்னசத்தை

நான் சிறு வயதிலிருந்து கதைகள் நிறைய வாசிப்பேன். சில கதைகளில் வரும் விசித்திரமான பெயர்களைப் பார்த்து விட்டு என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கும் ஏதாவது பெயர் கொடுக்கத் தொடங்கினேன்.

குழந்தையின் விளையாட்டை எல்லோரும் ரசித்தனர்.

ஒரு முறை தாத்தா நண்பர்களோடு கூடத்தில் பேசிக் கொண்டிருந்த போது ‘தாத்தாவிடம் சாவி வாங்கி வா’ என்றார் பாட்டி.

‘நிறைய தாத்தாக்கள் இருக்கிறார்களே. எந்தத் தாத்தாவிடம் கேட்பது?’ என்றேன்.

‘உன் தாத்தா’ என்றார் பாட்டி.



‘எல்லோரும் என் தாத்தாக்கள்தானே?’ என்றேன்.

‘பெரிய மீசை வைத்திருக்கிறாரே அந்தத் தாத்தா’ என்றார் பாட்டி.

‘ஓ, மீசை தாத்தாவா?’ என்றேன்.

அந்த கணத்தில்தான் அறுபது வயதுவரை வெறும் தாத்தாவாக இருந்தவர் மீசை தாத்தாவாக மாறினார்.

அம்மாவும், பாட்டியும் போனதைப் பற்றி மீசை தாத்தாவிற்கு வருத்தமில்லை. குழந்தைகளை நல்லபடியாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான தீர்வைத்தான் உடனடியாக தேடிக் கொண்டிருந்தார்.

அந்த சமயத்தில் அவரது தூரத்து சொந்தமான பெண் ஒருவர் சிறு பையில் ஒரே ஒரு மாற்றுப் புடவையோடு வந்தார். அப்பெண்ணுக்கு முப்பது வயதிருக்கும். அவள் அண்ணி அவளை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டாளாம்.

‘பத்து வருஷமாக சம்பளமில்லாத வேலைக்காரியாக வைத்திருந்தாள். எனக்கு ஒரு வரன்கூட பார்க்கவில்லையே! நேற்று பக்கத்து வீட்டுக்காரியிடம் வாய் தவறி அண்ணன் பார்த்துக் கொள்ளும் ஒரு ஏக்கர் நிலத்தில் எனக்கும் பங்கிருக்கிறது என்று சொல்லி விட்டேன். குடிகேடி என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டாள். அண்ணன் தனக்கு சம்பந்தமில்லாதது போல பேசாமல் இருந்துவிட்டான். பெரியப்பா, நான் உங்கள் பெண் போல. எனக்கு உங்களை விட்டால் வேறு போக்கிடம் இல்லை’ என்று கூடத்தில் சோபாவில் அமர்ந்திருந்த மீசை தாத்தாவின் காலடியில் தரையில் உட்கார்ந்து கொண்டு அழுதார் அப்பெண்.

‘எங்களுக்கும் உதவிக்கு ஆள் தேவைப்படுகிறது. குடும்பத்தில் ஒருத்தியாக, பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு இங்கேயே இருந்து கொள்’ என்றார் தாத்தா.

ஆனால் அண்ணார்களும், அக்காவும் சமீபத்தில் கிடைத்த சுதந்திரம் பறி போய் விடுமோ என்ற பயத்தில் ‘சமையலுக்குத்தான் ஏற்கனவே ஆள் இருக்கிறதே’ என்றனர்.

‘பரமனுக்குத் தாயைப் போல ஒரு பெண் தேவை. ஐந்து வயது குழந்தையடா’ என்று தாத்தா கூறிவிட்டார்.

அம்மாவை எதிர்பார்த்திருந்த என்னிடம் தாத்தா ‘இதுதான் உன் புது அத்தை’ என்று கூறினார். புது அத்தை என்றுமே அம்மாவாக இருக்கவில்லை.

அன்றே அப்பெண்ணுக்கு உயர்ந்தரக புடவைகளும், தேவையான மற்றவற்றையும் வாங்கிக் கொள்ள மீசை தாத்தா பணம் கொடுத்தார். புது அத்தைக்கு என்னை மிகவும் பிடித்துப் போய் விட்டது. ஆரம்பத்தில் சில நாட்கள் எனக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டே ‘நீ மட்டும் இல்லையென்றால் எனக்கு இந்த வீட்டில் இடம் கிடைத்திருக்காது. எனக்கு வாழ்க்கை கொடுத்தது நீதானடா’ என்று மனதாரச் சொல்வார்.

மற்ற மூன்று குழந்தைகளின் அபிமானத்தையும் பெற பெரிய முயற்சிகள் எடுத்தார். சமையல்காரியை அலட்சியப்படுத்திவிட்டு எங்களுக்கு விதவிதமாக சமைத்துப் போடுவார். அளவுக்கதிகமாக அன்பை வழிந்தோட விட்டார். மூத்தவர்களும் அதில் வழுக்கி விழுந்தனர். புது அத்தைமீது பிரியம் உண்டாகாவிட்டாலும் வெறுப்பு மறைந்துவிட்டது.

புது அத்தை வீட்டுக்கு வந்த அன்று ‘நான் யார் சொல் பார்ப்போம்’ என்றார் விளையாட்டாக.

நான் அப்போது வாசித்திருந்த ஆங்கிலக் கதை ஒன்றில் குழந்தையைப் பார்த்துக் கொள்ள வருபவரை ‘கவர்னஸ்’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தாத்தாவோ ‘அத்தை’ என்று சொல்லியிருக்கிறார்.

‘நீங்கள் கவர்னசத்தை’ என்றேன்.

புது அத்தை நான் அவரை கவர்னர் என்று சொல்வதாக நினைத்துக் கொண்டுவிட்டார் போலிருக்கிறது. மகிழ்ந்து போய்விட்டார். அன்றிலிருந்து அவர் கவர்னசத்தை ஆகிவிட்டார். அவருடைய உண்மையான பெயர் என்னவென்று அவருக்கே நினைவிருக்குமா என்று தெரியவில்லை.

பாட்டியின் மற்றொரு முகம் கவர்னசத்தை வரவால் தாத்தாவிற்குத் தெரியவந்தது.

கவர்னசத்தை வீட்டுக்கு வந்த மறுநாள் சித்தப்பாவின் வக்கீலின் உதவியாளர் இன்னொரு புதிய வழக்கு போடப்



போகிறோம் என்று ஒரு நோட்டீஸ் கொண்டு வந்து கொடுத்தார். கவர்னசத்தைதான் அதை வாங்கித் தாத்தாவிடம் கொடுத்தார்.

கவர்னசத்தை பற்றி உதவியாளர் சித்தப்பாவிடம் என்ன சொன்னார் என்பதுவும், சித்தப்பா பாட்டியிடம் என்ன சொன்னார் என்பதுவும் எனக்குத் தெரியாது. பாட்டியிடமிருந்து தாத்தாவிற்கு ஆள் மூலம் அவசரத் தகவல் வந்தது. ‘நீங்கள் வீட்டிற்குள் புதிதாகக் கொண்டு வந்திருக்கும் ஜாலக்காரியை வீட்டை விட்டுத் துரத்தி விட்டால் நான் வீடு திரும்புகிறேன்’ என்று சொல்லியனுப்பி இருந்தார்.

தாத்தா பதில் கூறவில்லை.

அதற்குப்பின் தாத்தா கவர்னசத்தையை ஒரு போதும் தனிமையிலோ, தனி அறையிலோ சந்திக்கவே இல்லை. எதுவானாலும் எங்கள் மூலம்தான் பேசுவார். கூடத்தில் எல்லோர் முன்பும்தான் ஆணைகள் பிறப்பிப்பார். கவர்னசத்தை தாத்தாவைத் தனியே சந்தித்து ஏதேனும் பேச முயன்றாலும் பதில் கூறாமல் எழுந்து போய்விடுவார்.

ஆனால் கவர்னசத்தைக்கு குடும்பத்தில் உள்ளவர்களுக்குரிய அத்தனை வசதிகளையும், உரிமைகளையும் கொடுத்திருந்தார். கவர்னசத்தை வந்த ஒரு மாதம் கழித்து தாத்தா சம்பளம் தந்தபோது கண்ணீர் விட்டு அழுதார். ‘நான் சம்பளம் வாங்கிக் கொள்ளத்தான் வேண்டுமா?’ என்று கேட்டார். தாத்தா சம்பளத்தை திருப்பி வாங்கிக் கொண்டுவிட்டார். அதன்பின் சம்பளமே தரவில்லை. வீட்டுச் செலவிற்கான பணம் வைக்கும் அலமாரி சாவியை கவர்னசத்தையிடம் தந்து விட்டார். தனக்குத் தேவையானதை கவர்னசத்தையே எடுத்துக் கொள்வார். அவர் செய்ததுதான் செலவு. அவர் எழுதியதுதான் கணக்கு. ஆனால், பணவிஷயத்தில் பாட்டி கூட கவர்னசத்தையை குறை சொல்ல முடியாது. அண்ணார்களுக்கு கல்யாணமாகும் வரை சாவிக்கொத்து கவர்னசத்தையிடம்தான் இருந்தது.

கவர்னசத்தைக்கு யார் சந்தோஷமாக இருந்தாலும் பிடிக்காது. தன்னால் முடிந்த வரை கெடுதல் செய்யப் பார்ப்பார். ஆனால் அது தலைகீழாகத்தான் போகும். அவர் எப்போது குரங்கு பிடிக்க

நினைத்தாலும் அது பிள்ளையாராகத்தான் முடியும். அவருக்கு அப்படிப்பட்ட விசேஷமான ராசி உண்டு.

## 7. கல்யாணப் பேச்சு

சில வாரங்களுக்கு முன் ஒரு நாள் ஜவுளி அண்ணி என்னிடம் இசை நிகழ்ச்சி ஒன்றுக்கு முன்பதிவு செய்து தரச் சொன்னார். வெளிநாட்டிலிருந்து வந்த இசைக் குழுவின் நிகழ்ச்சி. காலையில் பத்து மணிக்குச் சென்றேன். நுழைவுச் சீட்டு வாங்குமிடத்தைப் பார்த்துத் திகைத்துப் போனேன். சென்னை-யில் இருக்கும் அத்தனை இளவயதினரும் அங்கு கூடியிருப்பது போலத் தோன்றியது. பல நீண்ட வரிசைகளில் ஒன்றில் நின்று கொண்டிருந்தபோது அந்த வழியே சைக்கிளில் சென்று கொண்டிருந்த தாத்தா என்னைப் பார்த்து விட்டார்.

‘கஸ்டமரிடம் பணம் வாங்க வந்தேன்’ என்ற மீசை தாத்தா ‘என்னடா பரமா! நீ இந்த வெளிநாட்டு பாட்டெல்லாம் கேட்பாயா?’ என்று கேட்டார்.

‘இல்லை. ஜவுளி அண்ணி டிக்கட் வாங்கி வரச் சொன்னார்’ என்றேன்.

‘இன்று என்ன கிழமை?’ என்று கேட்டார் மீசைத் தாத்தா.

‘புதன்’ என்றேன்.

‘இப்போது நேரம் என்ன?’ என்று கேட்டார் மீசைத் தாத்தா.

‘பத்தரை இருக்கும்’ என்றேன்.

‘எத்தனை வரிசைகள்! ஒவ்வொன்றும் நீளமாக இருக்கிறதே’ என்றார் மீசைத் தாத்தா.

‘மொத்தம் மூவாயிரம் டிக்கெட்டுகள். இன்னும் இரண்டு மணி நேரமாகுமாம்’ என்றேன்.

சைக்கிளை மிதித்து நகர்த்திய மீசை தாத்தா, திரும்பி என்னருகே வந்தார். வெயில் கண்களைக் கூசியதால் கையை கண்களுக்கு மேல் வைத்துக் கொண்டு சொன்னார். ‘இந்தியாவில் இருக்கிற முக்கியமான இசை மேதைகளோட



பாட்டும், வாசிப்பும் போன வாரம் ஆறு டிவிடியில் வந்திருக்கிறது. பிஸ்மில்லா ஷெனாய், ஹரிபிரசாத் குழல் முதற்கொண்டு எல்லாமே இருக்கிறது. வேலை முடிந்து திரும்பி வந்ததும், தினமும் கேட்கிறேன். தூங்குகிறேனா அல்லது வேறு உலகத்தில் மிதக்கிறேனா என்றே தெரியவில்லை’ என்றார் மீசை தாத்தா. இவர் இசை கூட கேட்பாரா!

‘எனக்கு வீணை மட்டும்தான் பிடிக்கும் தாத்தா’ என்றேன்.

‘மட்டும்தான் என்கிற வார்த்தை மனுஷனுக்குத் தேவை-யில்லாதது. பார்க்கத் தெரிந்தவனுக்கு எல்லாக் காட்சியும் பிரம்மம்தான். கேட்கத் தெரிந்தவனுக்கு எல்லா இசையும் பிரம்மம்தான். கொட்டாங்கச்சியில் ஒற்றைக் கம்பி கட்டி நாம் வீசி எறிகிற சில்லறைக் காசுகளுக்கு வாசிக்கிறவனின் இசையும், பிரம்மாண்டமான அரங்கத்தில் சிம்பனியிலே வயலின் வாசிக்-கிறவனின் இசையும் ஒன்று போலத்தான் எனக்கு கேட்கிறது. இவன் மூலம் வருவதும் முழுமையான பிரம்மநாதம்தான். அவன் மூலம் வருவதும் முழுமையான பிரம்மநாதம்தான். தெருவோர கொட்டாங்கச்சி சிறியது, சிம்பனி வயலின் பெரியது என்று மனுஷன்தான் புத்தியை வைத்து யோசிக்கிறான்’ என்றார் மீசைத் தாத்தா.

வரிசை நகர, நானும் முன்னேறினேன். சைக்கிளைத் தள்ளிக் கொண்டே மீசை தாத்தாவும் கூடவே வந்தார். ‘வியன்னாவிலே இருந்தானே, அவன் பேரென்ன? லுட்விக் பீத்தோவன். அவன்கிட்டே கேட்டாலும் நான் சொன்னதையேதான் சொல்வான். அவனுக்கு காது நன்றாகக் கேட்கும்வரை கலைஞனாக இருந்தான். காது கேட்காமல் போனபின்புதான் மேதையானான். புலனை வைத்துத்தான் அறிவும், மனமும் அதிகப்பிரசங்கம் செய்கின்றன. வேறு வழியில்லாமல் காதுக்கு பதில் ஆன்மாவால் கேட்க ஆரம்பித்தபோதுதான் பீத்தோவனுக்கு சிம்பனிகளும், மற்றவைகளும் உள்ளுக்குள் இருந்து வந்தன’ என்றார்.

நாங்கள் மேலும் முன்னேறினோம்.

‘எல்லாமே பீத்தோவனுக்கு உள்ளேதான் இருந்தது. ஆன்மா வேலை செய்ய ஆரம்பித்ததும் ஆழத்தில் இருப்பது தெரிய ஆரம்பித்தது. பார்க்காதவனுக்கு சத்தியம் தெரியாது. பார்க்கிற-வனைப் பொறுத்து சத்தியம் பொய் போலவும் தெரியும். எப்போதும் எல்லோரிடமும் சாதாரணமாக, எளிமையாக இருக்கிற சத்தியம் அறிவுக்கு, பழக்கத்திற்கு, அகப்படாது. எதையும் யோசிக்காமல். எதிர்பார்க்காமல் சின்னக் குழந்தை மாதிரி ஆர்வத்தோடு பார்த்தால் சத்தியம் சத்தியமாகவே தெரியும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்’ என்றார் எண்பது வயதான மீசை தாத்தா.

‘அப்படி நேரடியாக சத்தியத்தைப் பார்க்கிறவர்கள் இந்தக் காலத்தில் இருக்கிறார்களா என்ன!’ என்றேன்.

‘இல்லாமல் என்ன! மதுரை வாத்தியார் பெண் ஜமுனா அப்படிப்பட்டவள்தான்’ என்ற மீசை தாத்தா பேச்சை மாற்றி ‘உனக்கு என்ன மாதிரியான வீணை பிடிக்கும்?’ என்று கேட்டார்.

‘எனக்கு வீணை என்றால் சரஸ்வதி வீணைதான் நினைவிற்கு வரும். ஏனோ சித்ர வீணை, ருத்ர வீணை எல்லாம் நினைவிற்கு வருவதில்லை’ என்றேன்.

‘போனவாரம் சாப்ட்வேர் சரி செய்ய வேண்டும் என்று கேட்ட உன் நண்பனை போய்ப் பார்த்தாயா? அது நினைவிற்கு வருகிறதா?’ என்று கேட்டார் தாத்தா.

‘இல்லை தாத்தா. அது மிகவும் சின்ன வேலை. தவிர வீட்டு வேலைகளுக்கே நேரம் சரியாக இருக்கிறது’ என்றேன்.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் மீசை தாத்தா போய்விட்டார்.

நான் சரியாக ஆயிரமாவது ஆள்! அதனால் புல்லாங்குழல் ஒன்று பரிசாகக் கிடைத்தது. அதை ஜவுளி அண்ணியிடம் கொடுத்தேன். புருஷண்ணாரும், மதுவண்ணாரும் சிரித்தனர். ‘நீயே வைத்துக் கொள் அல்லது எறிந்து விடு’ என்றனர். நான் பத்திரமாக வைத்திருந்தேன்.

வேறொரு நாள் காபி அண்ணியின் பெங்களூர் தோழி வீட்டுக்கு வந்திருந்தார். ‘மகாபலிபுரம் பார்க்க வேண்டும்’ என்றார். அன்று டிரைவர் ரகு விடுப்பு எடுத்திருந்தார். ‘பரமா, நீ கார் ஓட்டுகிறாயா? எந்த சமயத்திலும் கை கொடுக்க உன்னை



விட்டால் இந்த வீட்டில் வேறு எவருமில்லை’ என்றார் காபி அண்ணி.

கார் அடையாரில் போக்குவரத்து நெரிசலில் மெல்ல சென்று கொண்டிருந்தபோது, அருகே சரக்கு ஏற்றிய வேன் வந்தது. டிரைவருக்கு அருகே மீசை தாத்தா உட்கார்ந்திருந்தார். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்.

‘மகாபலிபுரம் போகிறோம் தாத்தா’ என்றேன் உற்சாகமாக.

காரின் பின்சீட்டில் இருந்த காபி அண்ணியையும், அவர் தோழியையும் ஒரு பார்வை பார்த்தார். மரியாதை செய்யும் வகையில் அண்ணி சீட்டில் சற்று முன்னகர்ந்து அமர்ந்தார். தோழிக்குத் தாத்தா யாரென்று தெரியவில்லை.

‘உன் அண்ணன்கள் எங்கே?’ என்று கேட்டார் மீசை தாத்தா.

‘அலுவலகம் போயிருக்கிறார்கள்’ என்றேன்.

‘சாப்ட்வேர் கேட்ட நண்பரைப் போய் பார்த்தாயா?’ என்று கேட்டார் மீசை தாத்தா.

‘இன்னும் இல்லை தாத்தா’ என்றேன்.

வேன் நகர்ந்து விட்டது.

மீசை தாத்தாவின் வேன் வெகு தூரம் தள்ளிச் சென்று-விட்டதை உறுதி செய்து கொண்டபின் தாழ்ந்த குரலில் ‘தாத்தாவிற்கு கலை உணர்ச்சியே கிடையாது. வேலை, சாப்பாடு, தூக்கம்! அவ்வளவுதான் அவருக்கு தெரிந்த வாழ்க்கை’ என்றார் காபி அண்ணி.

அதற்கடுத்த வாரம் சனியன்று மதியம் குழந்தைகள் மூவரையும் அழைத்துக் கொண்டு சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகே இருக்கும் தங்கமீன், பறவைகள் விற்கும் கடைக்குச் சென்றிருந்தேன்.

புருஷண்ணாருக்கு ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும்தான். ஆண் குழந்தை இல்லாத ஏக்கம் ஜவுளி அண்ணிக்கு உண்டு. ‘தங்கமீன் வாங்கலாம்’ என்று புருஷண்ணார் பெண் சொன்னாள்.

‘தாத்தா கடலில் கொண்டு போய் சேர்த்து விடுவார்’ என்றேன்.

‘சித்தப்பா, லவ் பேர்ட்ஸ் வாங்கலாம்’ என்றான் மதுவண்ணார் பையன். மதுவண்ணாருக்கு ஒரு பையனும், பெண்ணும் உண்டு.

‘வேண்டாம்’ என்றேன்.

‘என்னிடம் பணம் இருக்கிறது’ என்றான் மதுவண்ணார் பையன்.

‘தாத்தா கூண்டை திறந்து விட்டுவிடுவார்’ என்றேன்.

‘இங்கே என்ன செய்கிறீர்கள்?’ என்ற மீசை தாத்தாவின் குரல் கேட்டு திரும்பினேன்.

நான் பதில் சொல்லுமுன் ‘மீன் ஏற்றுமதி செய்ய பாட்டில்கள் வேண்டும் என்று கடைக்காரர் கேட்டிருந்தார். அதற்காக இங்கு வந்தேன்’ என்ற மீசை தாத்தா ‘இந்த மத்தியான வெயிலில் எதற்கு குழந்தைகளை கூட்டிக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தாய்?’ என்று கேட்டார்.

‘அண்ணார்களின் நண்பர்கள், அமெரிக்காவில் இருப்பவர்கள், விருந்திற்கு வந்திருக்கிறார்கள். குழந்தைகள் இருந்தால் தொந்தரவாக இருக்கும் என்பதால் என்னை வெளியே அழைத்துப் போகச் சொன்னார்கள்’ என்றேன்.

‘சாப்ட்வேர் என்ன ஆயிற்று?’ என்றார் தாத்தா.

‘வெயில் தாழ போகவேண்டும் தாத்தா’ என்றேன்.

தலையசைத்து விட்டு மீசை தாத்தா போய்விட்டார்.

அடுத்த நாளிரவு என்னையும், அண்ணார்களையும் மீசை தாத்தா தன் அறைக்கு அழைத்தார். அண்ணிகளும் வந்துவிட்டனர். ‘நாளை மதுரை போகலாம். பரமனுக்கு பெண் பார்க்கவேண்டும்’ என்றார். கவர்னசத்தை கதவை ஒட்டி அறைக்கு வெளியே நின்று கொண்டு உள்ளே நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தார்.

‘நாளைக்கா!’ என்ற புருஷண்ணார் என்னைப் பார்த்து ‘என்னடா! ஒரு வார்த்தை சொல்லவே இல்லையே’ என்றார்.

‘எனக்கே இப்போதுதானே தெரியும்’ என்றேன்.

‘யார் வீட்டுப் பெண்?’ என்றார் மதுவண்ணார்.



‘மதுரை வாத்தியார் வீட்டுப் பெண். நமக்குத் தூரத்து சொந்தம்’ என்றார் மீசை தாத்தா.

‘அவரா!’ அதிர்ச்சியுடன் கேட்டார் கவர்னசத்தை. ‘நம் அந்தஸ்திற்கு கொஞ்சம் கூட பொருந்தி வராது. போக, வர நன்றாக இருக்காது. எதுவும் செய்ய வக்கில்லாத குடும்பம். நம் டிரைவரே முப்பது பவுன் மிரட்டி வாங்கி கல்யாணம் செய்கிறான்’ என்றார்.

தன் தூரத்து உறவினரான மதுரை மாமா மீது மீசை தாத்தாவிற்கு ஒரு அலாதி பிரியம் உண்டு. பல வருடங்களுக்கு முன்பு எங்கள் கம்பெனியில்தான் வேலை பார்த்து வந்தார். ‘அவர் சொந்தக் குழந்தை மாதிரி கம்பெனியை பார்த்துக் கொள்வார்!’ என்பார் தாத்தா.

பாண்டிச்சேரியிலிருந்த வியாபாரி ஒருவர் எங்கள் கம்பெனியிலிருந்து மொத்தமாக பாட்டில்கள் வாங்கி விநியோகம் செய்து வந்தார். அலைச்சலே இல்லாமல் கம்பெனிக்கு அவர் மூலம் முப்பது சதவிகிதம் விற்பனை ஆகிக் கொண்டிருந்தது. அடிக்கடி சென்னை வந்து தாத்தாவை சந்தித்துவிட்டுப் போவார். அவர் தன் கடைக்கு பத்தாவது ஆண்டு விழா நடத்தினார். தாத்தாவிற்கும், கம்பெனி சிப்பந்திகளுக்கும் அழைப்பு விடுத்தார். ‘உங்களுக்காக எவ்வளவு பாடுபடுகிறேன். ஒரு முறை கூட நீங்கள் கடைக்கு வந்ததில்லையே’ என்று கோபித்துக் கொண்டார்.

தாத்தா அப்போது திருச்சி போக வேண்டியிருந்ததால், தன் சார்பில் மதுரை மாமாவை பாண்டிச்சேரிக்கு அனுப்பி வைத்தார். ‘நீ எங்கேயும் போவதில்லை. பாண்டியையும் பார்த்துவிட்டு, விழாவிற்கும் போய் வா’ என்று சொல்லி அனுப்பினார்.

இரண்டு நாட்கள் பாண்டியிலிருந்து விட்டுத் திரும்பிய மதுரை மாமா ‘எல்லா பாட்டில்களும் சாராயக் கம்பெனிகளுக்குத்-தான் போகின்றன’ என்றார். ‘என்னிடம் மருந்து கம்பெனிகளுக்காக வாங்குகிறேன் என்றுதானே சொன்னார்?’ என்றார் தாத்தா. ‘பாட்டில்கள் வாங்கி சாராயம் காய்ச்சும் கம்பெனிகளுக்கு விற்கிறார். எனக்கு இது சரியாகப் படவில்லை.

நம் கம்பெனி பல வருடங்களாக சாராயத்தின் மூலம் சம்பாதித்து வருகிறது' என்று வருத்தத்துடன் கூறினார் மதுரை மாமா.

தாத்தா பாண்டிச்சேரி வியாபாரிக்கு பாட்டில்கள் தருவதை உடனே நிறுத்தினார். மொத்த வியாபாரி 'தரமான பாட்டில்கள், விலை கூட தருகிறேன்' என்று கூறியும் தாத்தா மறுத்துவிட்டார். கம்பெனி விற்பனை முப்பது சதவிகிதம் குறைந்தது. அதன்பின் வேறு இடங்களில் ஆர்டர் எடுத்து விற்பனையை தாத்தா கூட்டிவிட்டாலும், பாட்டிக்கு மாமா மீது வருத்தம் வந்து விட்டது.

'மதுரைக்காரனுக்கு பொறாமை. நம் வியாபாரத்தை கெடுக்கிறான்' என்று பொருமினார் பாட்டி. மீசை தாத்தா ஊரில் இல்லாத சமயமாக மாமாவை வீட்டிற்கு அழைத்து மிகவும் மரியாதைக் குறைவாகத் திட்ட, மாமா தாத்தாவிடம் சொல்லிக் கொள்ளாமல், ராஜினாமா கடிதம் எழுதி வைத்துவிட்டு சொந்த ஊரான மதுரைக்கே திரும்பிவிட்டார்.

அங்கே ஏதோ ஒரு தனியார் பள்ளிக்கூடத்தில் சொற்ப சம்பளத்தில் தற்காலிக ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்து, கல்யாணம் செய்து கொண்டு எளிமையாக வாழ்ந்து வருகிறார். கல்யாணத்திற்குப் பாட்டி போகவில்லை. தாத்தா மட்டும்தான் போனார். மதுரைக்குப் போகும்போதெல்லாம் மாமா வீட்டில்தான் மீசை தாத்தா தங்குவார்.

கல்யாணமான நாள் முதல் மதுரை அத்தையும் அதே தனியார் பள்ளிக்கூடத்தில்தான் பல வருஷங்களாக ஒன்றாம் வகுப்பு ஆசிரியையாக வேலை பார்த்து வந்தார். இரண்டு பேர் வேலை பார்த்தும் ஒவ்வொரு மாதமும் பத்தாம் தேதிக்கு மேல் 'இல்லை' என்கிற இனிய கானம்தான் வீட்டில் ஒலித்தது. ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் அரசாங்க மானியம் பெறும் பள்ளிக்கூடத்தில் அத்தைக்கு வேலை கிடைத்தது. ஆனால் வேலை செய்ய வேண்டிய இடம் மதுரையிலிருந்து மூன்று மணி நேர பஸ் பிரயாண தூரத்தில் இருக்கும் கிராமம். அங்கேயே தங்கிக் கொண்டு, வாரத்திற்கு ஒருநாள் மதுரை வந்து போவார். அத்தைக்கு அந்த வேலை கிடைத்த பின்பு வீட்டு நிலைமை எவ்வளவோ முன்னேறிவிட்டது.



இப்போதெல்லாம் இருபதாம் தேதிக்கு மேல்தான் 'இல்லை' என்கிற இனிய கானம் ஒலிக்கிறதாம். இவையெல்லாம் கவர்னசத்தை தந்த தகவல்கள்.

மீசை தாத்தா 'கொஞ்ச நாட்களாகவே நமக்குத் தெரிந்த பல பெண்களையும் பற்றி யோசித்தேன். இந்த இடம்தான் பரமனுக்கு ஏற்ற இடம்' என்றார்.

'வாத்தியார் வீட்டை பார்த்திருக்கிறேன். எந்த யுகத்தில் எந்த பெருச்சாளி கட்டிய வளையோ! மனிதன் வாழக் கூடிய வீடா அது! இன்னமும் இடிந்து விழாமல் இருப்பது ஆச்சரியம்தான்' என்றார் கவர்னசத்தை.

'ரமணர் திருவண்ணாமலைக்கு போவதற்கு முன்பு மதுரையில் இருந்தார். அவர் வெங்கடராமனாக மதுரை அமெரிக்கன் மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, அடிக்கடி மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வருவார். அப்போதெல்லாம் ஓய்வெடுக்க வாத்தியார் வீட்டு திண்ணையில் கொஞ்சம் நேரம் உட்காருவார். வாத்தியாரின் தாத்தா அவரை பலமுறை பார்த்திருக்கிறாராம். அதனாலேயே வாத்தியார் பழைய வீட்டை மாற்றாமல் இருக்கிறார்' என்றார் மீசை தாத்தா.

'தெரிந்தோ, தெரியாமலோ அந்த மகானுக்கு செய்த சேவை பல தலைமுறைகளை காப்பாற்றும். மனிதன்தான் மகானுக்கு சேவை செய்ய வேண்டுமா? வீடும் நிலமும் சேவை செய்யக் கூடாதா?' என்றார் ஜவுளி அண்ணி.

'வசதியான இடமாக பார்க்கலாமே' என்றார் மதுவண்ணார்.

'ஆமாம்' என்றார் காபி அண்ணி.

உடனே கவர்னசத்தை வேறு மாதிரி பேச ஆரம்பித்தார். 'உங்கள் தாத்தா சொல்வதுதான் சரி. நியாயத்தைப் பார்க்க வேண்டும். பரமன் நம் வீட்டு ராஜாதான். ஆனால், உங்கள் தாத்தாவிற்கு பேரன் என்பதைத் தவிர அவனிடம் வேறென்ன தகுதி இருக்கிறது? உங்களுக்கு ஒரு தங்கை இருந்தால் பரமனுக்குக் கொடுப்பீர்களா?' என்று அண்ணிகளைப் பார்த்து கவர்னசத்தை கேட்டார்.

அண்ணிகள் பதில் சொல்லவில்லை.

'மதுரைப் பெண்தான் பெரியவர்கள் பேச்சு கேட்டு அடக்கமாக வீட்டு வேலை செய்து கொண்டு ஒழுங்காக இருப்பாள். வசதியான பெண்கள் என்றால் திமிர் பிடித்து அலைவார்கள். பிள்ளை பெறுவதைத் தவிர வேறு வேலை செய்யத் தெரியாது' என்றார் கவர்னசத்தை.

காபி அண்ணிக்கு கோபம் வருவது முகத்தில் தெரிந்தது. ஆனால் என்ன செய்வது? கவர்னசத்தையை எதிர்த்து பேச முடியாதே!

'மதுரை அத்தை பல வருடங்களாக வெளியூரில்தானே வேலை பார்க்கிறார்? தாயின் கவனிப்பு இல்லாமல் தானாக வளர்ந்த பெண்' என்றார் ஜவுளி அண்ணி.

'மதுரை மாமாவிற்கும் அத்தைக்கும் சொற்ப சம்பளம். பெண்ணுக்குப் பெரிய குடும்பத்தில் வாழத் தெரியுமா?' என்றார் காபி அண்ணி.

'வேறு நல்ல இடமாக பார்க்கலாம். என் அப்பாவிடம் சொல்கிறேன்' என்றார் ஜவுளி அண்ணி.

'நானும் என் அப்பாவிடம் சொல்கிறேன்' என்றார் காபி அண்ணி.

'வாத்தியார் குடும்பத்தையும், பெண்ணையும் எனக்கு நன்றாகத் தெரியும். பெண்ணுக்குப் பரமனை பிடித்திருந்தால் கல்யாணத்தை அடுத்த மாதமே முடித்து விடலாம்' என்றார் தாத்தா.

'என்ன அவசரம்?' என்றார் புருஷண்ணார்.

'வயதாகிறது' என்றார் தாத்தா.

'உங்களுக்கு வயதானால் என்ன? நாங்கள் இல்லையா' என்றார் மதுவண்ணார்.

'பரமனின் வயதைச் சொன்னேன். வாத்தியாரிடம் பத்து நாட்களுக்கு முன்பே பேசிவிட்டேன். பெண் வீட்டுக்காரருக்கு நம் வார்த்தை மட்டும் போதாது. அவரும் பரமனைப் பற்றி விசாரிக்க வேண்டுமே! இன்று மதியம்தான் அவருக்கு போன் செய்து நாளை மாலை பெண் பார்க்க வருகிறோம் என்று



சொல்லிவிட்டேன். எல்லோருக்கும் ரயில் டிக்கெட் எடுத்து விட்டேன். காலையில் போகிறோம்' என்றார் தாத்தா.

'அவசரமாக விடுப்பு எடுக்க என்னால் முடியாது' என்றார் புருஷண்ணார்.

'என்னாலும் முடியாது' என்றார் மதுவண்ணார்.

'இன்று விருந்திற்கு வந்தவர்களோடு நாளையும், மறுநாளும் வெளியே போக ஏற்கனவே திட்டம் போட்டுவிட்டோமே. அக்கா, நீங்கள் மதுரை போய் வாருங்களேன். இங்கே நானிருந்தால் போதும். நீங்கள் வராவிட்டாலும் விருந்தினர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்' என்றார் காபி அண்ணி.

மீசை தாத்தா ஊன்றுகோலை கைகளில் உருட்டினார். அவருக்குக் கோபம் வரத் தொடங்கிவிட்டது.

'வேண்டுமானால் யசோதாவைக் கூட்டிக் கொண்டு போகலாம்' என்றார் ஜவுளி அண்ணி.

'ஒரு வாரத்திற்கு முன்பே மேள, தாளத்தோடு சென்று பட்டுவேட்டி வைத்து அழைப்பு தந்தால்தான் மாப்பிள்ளை வருவார்' என்றார் கவர்னசத்தை.

'பெண் பார்ப்பதற்குப் பரமனும், தாத்தாவும் போனால் போதும். நிச்சயம், கல்யாணம் என்று இன்னும் எவ்வளவோ உண்டே!' என்றார் மதுவண்ணார்.

தாத்தா பதில் சொல்லாமல் ஊன்றுகோலை மேலும் வேகமாக உருட்டினார்.

அதைக் கவனித்த ஜவுளி அண்ணி கண்களால் ஜாடை காட்டியதும் அனைவரும் அமைதியாகி விட்டனர்.

'அடுத்த வாரம் வைத்துக் கொண்டால் எல்லோரும் போய் வரலாம்' என்றார் ஜவுளி அண்ணி.

'நான், பரமன், கவர்னசத்தை மூன்று பேர் மட்டும் போய் வருகிறோம்' என்றார் தாத்தா.

எல்லோரும் அறையை விட்டு வெளியே வந்தோம்.

'பரமா, பெண் அனேகமாக நாட்டுப்புறமாகத்தான் இருப்பாள். பிடிக்கவில்லை என்று சொல்லிவிடு, நான் உனக்கு வேறு நல்ல பெண்ணாக பார்க்கிறேன்' என்றார் ஜவுளி அண்ணி. அவர் கண்கள் சிறிது கலங்கி இருந்தன.

‘அதுதான் சரி. ஒன்றுமில்லாதவள் உன் அண்ணிகளைப் பார்த்துப் பொறாமைப்படுவாள். குடும்பத்தைப் பிரித்து-விடுவாள்’ என்றார் காபி அண்ணி.

‘தனக்கு எடுபிடிக்கு ஆள் வேண்டும் என்பதற்காக கவர்னசத்தை மதுரைப் பெண்தான் வேண்டும் என்கிறார்’ என்றார் ஜவுளி அண்ணி.

‘கவர்னசத்தை பேச்சைக் கேட்டு தாத்தாவே முடிவெடுத்துக் கொள்ளட்டும். நமக்கென்ன?’ என்றார் புருஷண்ணார்.

‘என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? பரமன் நம் பிள்ளை’ என்றார் ஜவுளி அண்ணி.

‘தாத்தா ஏன்தான் இப்படிச் செய்கிறாரோ! என் அப்பாவிடம் சொன்னால் தங்கச் சிலையை வைரத்தில் இழைத்து வெள்ளித் தேரில் கொண்டுவந்து இந்தாடா பரமா என்று கொடுத்துவிட்டுப் போவார்’ என்றார் காபி அண்ணி.

காபி அண்ணி தன் அறைக்குப் போனபின் சிறிது மன வருத்தத்துடன் சிரித்தார் ஜவுளி அண்ணி. ‘கல்யாணம், பண்டிகை, விசேஷம் என்றால் வசதியானவர்கள் பட்டு ஜவுளிதான் வாங்குவார்கள். உன் காபி மாமாவிற்கு எத்தனை பெரிய மனிதர்களை தெரிந்து விடப் போகிறது?’ என்றார்.

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

# நளவெண்பா

நளனும், தமயந்தியும் காட்டில் துகிலை இழந்து "ஆவியும் துகிலும் ஒன்றான" வரலாறு நளவெண்பா. கலி நீங்கி அவர் நாடு திரும்புவதை

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாள்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ
ஏதோ வுரைப்ப னெதிர்.

என்றார் புலவர். இது 400 பாடல்கள். ஆங்கில மொழி பெயர்ப்பை ஒரு ரஷ்ய சிப்பாய் படித்து மனைவியின் விஸ்வாசத்தால் பூரித்தவன் தான் போருக்குப் போயிருந்த ஆண்டுகளில் அவன் மனைவியின் விஸ்வாசத்தை நினைத்து வியந்தான். அந்த நாட்களில் ரஷ்யாவில் ஜனத்தொகை குறைவு. சர்க்கார் எப்படி ஜனத்தொகையை அதிகப்படுத்த முடியும். எனவே புதுச்சட்டம் வந்தது. திருமணமாகாத பெண்கள், விதவைகள், திருமணமாகி மலடியாயிருப்பவர் அனைவரும் பிள்ளைகளைப் பெற வேண்டி கட்டாயப்படுத்தியது சட்டம். உலகம் எப்படியாக இருந்தாலும், சமூகம், சட்டத்தால் கட்டாயப்படுத்தினாலும், மனிதனுக்கு விஸ்வாச-முண்டு. அவன் மனைவிக்கு உண்மையாக இருக்க மட்டும் விரும்புவான். செயலால் இலட்சியமாக

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

இருக்க முடியாவிட்டாலும் மனைவி கணவனுக்கு விஸ்வாசத்திற்குரியவள். அதுவே அவனுக்கு மன-நிறைவு தரும். உலகெங்கும் எல்லாக் காலத்திலும் பெண் தூய்மையாக, விஸ்வாசமாக நெறியாக மட்டும் மனத்தின் ஆழத்தில் விரும்புவாள். செயல் வேறு. எண்ணத்தின் சிறப்பு வேறு. அந்தச் சிப்பாய் தமயந்தியைக் கண்டு வியந்தான். மனைவியைத் தமயந்தியாக மனதில் வரித்தான். நளவெண்பாவை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்தான். பரம்பரையாக திருமணத்தை அறியாத குடும்பத்துப்பிள்ளை 6 பிள்ளைகளில் மூத்தவன். அந்தரங்கமாக அவன் தன் தாயாரைப் பற்றி நெகிழ்ந்து பேசிய பொழுது "திருமணம் என்று இல்லையென்றும், ஒருவருடனேயே நிலையாக வாழும் பரம்பரை எங்கள் குடும்பம்" என்றான். மனிதன் கொலை செய்வான், திருடுவான், பொய் சொல்வான், ஏமாற்றுவான். அவை அவன் செயல்படும் வகை. ஆழத்தில் மனிதன் ஆத்மா. அது தூய்மை தவிர வேறெதையும் அறியாது. அவனைத் தூய்மையாக விஸ்வாசமாக தன் கற்பு நெறியால் காப்பது பெண். பெண்ணின் தூய்மை பிறரையும் தூய்மையாக்கவல்லது.